ஹுஸீர் அவர்களின் கட்டளைகளின் ஒளியில் சமூக வலைதளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதும் அதன் பயன்களும்.... பக்கம் 3

இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்) தொடர்-6 பக்கம் 9

எல்லாரிடமும் அன்பு எவரிடமும் இல்லை வெறுப்பு பக்கம் 16

மஜ்லிஸே ஷூரா யு.கே மற்றும் கனடா (தொடர்ச்சி...) பக்கம் 20


மாத இதழ்

# ....நுபுவ்வத் வழி....

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | March 2026 | Vol. 5 - Issue No. 4

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311




**இந்த காலத்தின் மிகப்பெரும் சவால் சமூக ஊடகங்கள் மற்றும் AI (Artificial Intelligence) ஆகும். இப்போது செய்யப்பட்ட ஆய்வுக்கு ஏற்ப இளைஞர்களுக்கு மத்தியில் சமூக ஊடகங்களில் எல்லையில்லாத பயன்பாடு மூளையின் ஆரோக்கியத்தின் மீது எதிர்மறையான விஷயங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.**



# திருக்குர்ஆன்

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱتَّقُوا۟ ٱللَّهَ وَكُونُوا۟ مَعَ ٱلصَّٰدِقِينَ

நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் இணைந்து கொள்ளுங்-கள். (9:119)



# ஹதீஸ்

قالَ رَسُولُ اللّٰهِ (صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَ آلِهِ وَسَلَّمَ):
«مَثَلُ الجَلِيسِ الصَّالِحِ وَالجَلِيسِ السَّوْءِ،
كَمَثَلِ صَاحِبِ المِسْكِ وَكِيرِ الحَدَّادِ، لاَ يَعْدَمُكَ
مِنْ صَاحِبِ المِسْكِ إِمَّا تَشْتَرِيهِ، أَوْ تَجِدُ
رِيحَهُ، وَكِيرُ الحَدَّادِ يُحْرِقُ بَدَنَكَ،
أَوْ ثَوْبَكَ، أَوْ تَجِدُ مِنْهُ رِيحًا خَبِيثَةً»

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

நல்ல நண்பனுக்கும் தீய நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி வைத்திருப்பவரும் கொல்லனின் உலையும் ஆகும். கஸ்தூரி வைத்திருப்பவரிடமிருந்து உமக்கு ஏதும் கிடைக்காமல் போகாது! நீர் அதை விலைக்கு வாங்கலாம் அல்லது அதன் நறுமணத்தையாவது பெறலாம்! கொல்லனின் உலை உம்முடைய வீட்டையோ உம்முடைய ஆடையையோ எரித்து விடும் அல்லது அவனிடமிருந்து கெட்ட வாடையை நீர் பெற்றுக் கொள்வீர்! (புகாரி ஹதீஸ் எண் 2101)

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் சமூக வலைதளங்களை சரியான முறையில் பயன்படுத்துவதும், அதன் பயன்களும், மேலும் அதனை தவறாகப் பயன்படுத்துவதில் இருந்தும், அதன் இழப்புகளிலிருந்தும் தவிர்ந்திருத்தல்

**மவ்லவி K. தாரிக் அஹ்மத்**
(அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாத் நூருல் இஸ்லாம்)

தமிழாக்கம்: மவ்லவி M. ரஃபீக் அஹ்மத்



يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَتَّبِعُوْا خُطُوٰتِ الشَّيْطٰنِ ؕ وَمَنْ يَّتَّبِعْ خُطُوٰتِ الشَّيْطٰنِ فَاِنَّهٗ يَاْمُرُ بِالْفَحْشَآءِ وَالْمُنْكَرِ ؕ وَلَوْلَا فَضْلُ اللّٰهِ عَلَيْكُمْ وَرَحْمَتُهٗ مَا زَكٰى مِنْكُمْ مِّنْ اَحَدٍ اَبَدًا ۙ وَّلٰـكِنَّ اللّٰهَ يُزَكِّىْ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ سَمِيْعٌ عَلِيْمٌ

மொழியாக்கம்: நம்பிக்கை கொண்டவர்களே! ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள். ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பவரைத் தீய நடத்தைகளையும், வெறுக்கத்தக்கவற்றையும் செய்யுமாறு அவன் ஏவுகிறான். அல்லாஹ்வின் அருளும், அவனது கருணையும் இல்லாமலிருந்திருப்பின் உங்களுள் எவரும் ஒருபோதும் தூய்மையடைந்திருக்க மாட்டார். (24:22)

சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது கவிதை வரிகளில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைவா! உனது கருணையினால் ஷைத்தான் மீது எனக்கு வெற்றியை வழங்குவாயாக. அவன் எண்ணற்ற தனது படைகளை ஒன்றுதிரட்டிக் கொண்டிருக்கின்றான். இறைவா! வழக்கத்திற்கு மாற்றமான ஓர் உணர்வையும், வெப்பத்தையும் நீ எனக்கு வழங்குவாயாக. அதன் மூலம் மார்க்கத்திற்கான கவலையில் ஒரு பைத்தியக்காரனைப் போன்று நான் ஆகி விட வேண்டும். சமுதாயத்திற்காக எனது உள்ளத்தில் அத்தகைய ஒரு நெருப்பை மூட்டுவாயாக. அதன் எண்ணற்ற பிளம்புகள் ஒவ்வொரு நொடியும் வானம் வரை சென்றடைய வேண்டும்.

சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இன்றைய காலகட்டம் மிகவும் மோசமாகிக் கொண்டிருக்-கின்றது. பல வகையான இணைவைத்தலும், மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்படுபவையும் பல தீமைகளும் உருவாகி விட்டன. பைஅத் செய்யும்போது உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவேன் என்று செய்யப்படுகின்ற இந்த உறுதிமொழி இறைவன் முன்னிலையில் செய்யப்படுகின்ற உறுதிமொழியாகும். இப்போது மரணம் வரை இதன் மீது முழுமையாக நிலைத்திருக்க வேண்டும். அது அல்லாமல் பைஅத் செய்யவில்லை என்று புரிந்து கொள்ளுங்கள். இதில் நிலைத்திருந்தால் அல்லாஹ் மார்க்கத்திலும், உலகிலும் அருளை வழங்குவான். உங்களது அல்லாஹ்வின் நாட்டத்திற்கு ஏற்ப முழுமையான இறையச்சத்தை மேற்கொள்ளுங்கள். காலம் இக்கட்டானதாகும். அல்லாஹ்வின் கோபம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எவர்கள் அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்ப தங்களை ஆக்கிக் கொள்வார்களோ அவர்கள் தமது உயிர், தமது குடும்பம் மற்றும் சந்ததிகள் ஆகியோர் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள். இறைவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதில் நிலைத்திருங்கள். பைஅத்தின்போது நீங்கள் செய்த உடன்படிக்கையில் நிலைத்திருங்கள். இறைவனின் அடியார்களுக்கு துன்பம் தராதீர்கள். திருக்குர்ஆனை மிகவும் கவனமாக படியுங்கள். அதற்கேற்ப செயல்படுங்கள். எல்லா வகையான பரிகாசம், வீணான விஷயங்கள் மற்றும் இணை வைக்கின்ற சபைகள் ஆகியவற்றிலிருந்து தவிர்ந்திருங்கள். ஐவேளையும் தொழுகையினை நிலைநாட்டுங்கள்.

சுருக்கமாக, நீங்கள் செய்யாமல் தவிர்த்து விடுகின்ற இறைவனின் எந்தவோர் கட்டளையும் இருக்கக் கூடாது. உடலையும் தூய்மையாக வைத்திருங்கள். உள்ளத்தை எல்லா வகையான பொருத்தமற்ற வெறுப்பு, காழ்ப்புணர்ச்சி மற்றும் பொறாமையில் இருந்து தூய்மைப்படுத்துங்கள். இந்த விஷயங்களை இறைவன் உங்களிடம் விரும்புகின்றான். (மல்ஃபூஸாத் பாகம் 5 பக்கம் 75-76 வரை)

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம், சுவீடனைச் சார்ந்த ஓர் இளைஞர், தங்களின் பார்வையில் இன்று மனித இனத்திற்கு முன்னிருக்கின்ற மிகப்பெரிய அறைகூவல் என்ன? என்று கேட்டார். அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்:

“இந்த சமூக ஊடகங்கள், டி.வி சேனல்கள், தவறான செயல்கள், AI போன்றவையே சவால்களாக உள்ளன. இவற்றை சரியான முறையில் பயன்படுத்துங்கள். அவற்றை பயன்படுத்துவது சரிதான். ஆகுமான வழிகளில் அதை பயன்படுத்துங்கள். இதே ஊடகங்களில் நல்லொழுக்கங்கள் பற்றிய விஷயங்களை பேணுங்கள். மார்க்க விஷயங்களை பேசுங்கள். இறைவனின் தூதுச் செய்தியை கேட்கச் செய்யுங்கள். இவையே இந்த அறைகூவல்களை முறியடிப்பதாகும். அதாவது உங்களது ஒழுக்கம் சரியாக இருக்கும். உங்கள் மார்க்கமும் சரியாக இருக்கும். இது என்ன விஷயம் என்று மக்களுக்கு விழிப்புணர்வும் ஏற்பட்டு விடும். அது சரியான முறையில் இருக்கும். இதிலிருந்து விடுதலை கிடைப்பது ஒன்றும் கஷ்டம் அல்ல. இதனை சரியாக முறையில் பயன்படுத்துவதற்கு அஹ்மதிகள் இருக்கின்றனர். அவர்களே அதனை சரியாக பயன்படுத்த வேண்டும். இறைவனின் போதனை மற்றும் அவனது கட்டளைக்கு ஏற்ப அதிலேயே எத்தகைய விஷயங்களை சேர்க்க வேண்டுமென்றால் மக்கள் தீமைகளை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்காமல் உங்களது நல்ல விஷயங்களையும் பார்க்க வேண்டும். இவ்வாறே இந்த அறைகூவலை எதிர்கொள்ள முடியும்.”

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: இந்த காலத்தின் மிகப்பெரும் சவால் சமூக ஊடகங்கள் மற்றும் AI (Artificial Intelligence) ஆகும். இப்போது செய்யப்பட்ட ஆய்வுக்கு ஏற்ப இளைஞர்களுக்கு மத்தியில் சமூக ஊடகங்களில் எல்லையில்லாத பயன்பாடு மூளையின் ஆரோக்கியத்தின் மீது எதிர்மறையான விஷயங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

ஓர் ஆய்வில் 204 இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் Social Media–வை அதிகமாக பயன்படுத்தக் கூடியவர்களே அதிகமான Stress, Anxiety (ஏக்கம்) மற்றும் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். ஒரு மனநல நிபுணர் இவ்வாறு கூறினார். அதாவது Technology மற்றும் சமூக ஊடகங்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதால் தூக்கத்தில் இடையூறு, கோபம் அதிகரித்தல் மற்றும் சமுதாயத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கும் நிலை போன்ற நோய்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதை தவிர International Journal of Indian Psychology பல (இந்திய மனநிலையின் சர்வதேச பத்திரிகை) தரப்பிலிருந்து வெளியிடப்பட்டுள்ள ஓர் ஆய்வில் இந்தியாவில் பதின்ம வயதில் காலெடி வைத்துள்ள மாணவர்களில் ஏறக்குறைய 32 சதவீதம் பேர் சமூக ஊடகங்களின் போதைக்கு இரையாகி உள்ளனர். 85 சதவீதம் பேர் Cyber Blowing–யை (கணினியினால் ஏற்படும் ஆபத்துகள்) சந்தித்து வருகின்றனர். அது அவர்களை மன அழுத்தம், தன்னம்பிக்கையில் குறைவு ஆகியவற்றின் பக்கம் கொண்டு செல்கின்றது என்று வாக்குமூலம் கொடுத்துள்ளனர். இதன் விளைவாக இவற்றின் பக்கம் திரும்புவதனால் இளைஞர்களிடம் சமுதாயத்தை விட்டும் தனித்திருத்தல், கடுமையான உணர்வின் அழுத்தம் அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. அது பெரும்பாலும் தற்கொலை தொடர்பான எண்ணங்களாகவும், மனநிம்மதியின்மையினால் ஏற்படும் நோய்களாகவும் மாறலாம்.




இந்த நிலை தெளிவுபடுத்துவது என்னவென்றால், நாம் தொழில்நுட்பத்தில் இருந்து கிடைக்கும் பலன்களை மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடாது. மாறாக, அதன் அபாயங்களை தெரிந்து கொள்ளும் விதமாக, வலுவான தர்பிய்யத் நிகழ்ச்சிகளையும் நடத்துவது மற்றும் DIGITAL LITERACY (கணினி பற்றிய அறிவு) பற்றியும் விழிப்புணர்வு தரும் விஷயங்களையும் கூறுவது மிகவும் தேவையானதாக இருக்கிறது.

சமூக ஊடகங்களின் அதிகரித்து வருகின்ற இந்த சவால்களுககு எதிரில் அஹ்மதிகளாகிய நம்மிடம் அல்லாஹ்வின் மகத்தான பேரருள் இருக்கின்றது. அதுவே கிலாஃபத்தின் அருளாகும். உலகில் எங்கு மக்கள் சிக்கல்கள், மன அழுத்தம், தவறான செயல்கள் ஆகியவற்றின் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கின்றார்களோ அங்கு நமது காலத்தின் கலீஃபா ஒவ்வொரு சிறு சிறு விஷயத்திலிருந்தும், பெரும் பெரும் விஷயங்கள் வரை நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் புதிய காலக்கட்டத்தின் அபாயங்களைப் பற்றி மட்டும் நமக்கு தெரிவிக்கவில்லை. மாறாக, அவற்றிலிருந்து தப்பிப்பதற்கான வழிமுறைகளையும் அவர்கள் கற்றுத் தருகின்றார்கள். அதாவது அஹ்மதி இளைஞர்கள் தமது நல்லொழுக்கம், பார்வைகள், நேரம், உள்ளம், மூளை

ஆகியவற்றை பாதுகாக்க வேண்டும். மேலும் சமூக ஊடகங்களின் பலனற்ற விஷயங்களில் ஈடுபடாமல் அவற்றை இஸ்லாத்தின் அழகிய போதனைகளை உலகம் வரை எட்ட வைப்பதற்கான வழியாக ஆக்கிக் கொள்ளுங்கள். கிலாஃபத் போன்ற ஒளிமயமான மினாரா கிடைக்கப் பெற்றிருக்கின்ற நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். அதன் ஒளியில் நாம் இந்த காலத்தின் வழிகேடுகள், மனரீதியான தாக்குதல்கள், ஒழுக்க குழப்பங்கள் மற்றும் சீர்கேடுகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பாக இருந்தவாறு சரியான வழியில் நடக்க முடியும்.

2025–ல் நடைபெற்ற UK–ன் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் வருடாந்திர தேசிய இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு போதனை வழங்கினார்கள்:

“துர்பாக்கிய நிலை என்னவென்றால், இன்றைய காலக்கட்டத்தில் பல இளைஞர்களும் தமது முழு நேரத்தையும் ONLINE VIDEO–க்களை பார்ப்பது, TV நிகழ்ச்சிகளை பார்ப்பது அல்லது VIDEO GAMES விளையாடுவது ஆகியவற்றில் கழிப்பதற்கு பகரமாக அந்த நேரத்தை ஆரோக்கியமான வெளிப்புற ஈடுபாடுகளிலும் விளையாட்டுகளிலும் பங்கு பெறுவதன் மூலம் கழிக்க வேண்டும். நமது இஜ்திமாக்களில் விளையாட்டுகளும், போட்டிகளும் இந்த நோக்கத்திற்காகவே வைக்கப்படுகின்றன. அதாவது இளைஞர்கள் வெளிப்புற சுற்றுச்சூழலில் புத்தம்புது காற்றை பெற வேண்டும். உடல் ஆரோக்கியத்தை சிறப்பானதாக ஆக்க வேண்டும். தமது FITNESS–ஐ பாதுகாக்க வேண்டும். ஒவ்வொரு சிறுவனும், காதிமும் தினந்தோறும் திருக்குர்ஆனை ஓத வேண்டும். அதன் பொருளை புரிய வேண்டும். அதன் போதனைகளுக்கேற்ப செயல்பட முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். நேரத்தை வீணாக கழிப்பதற்கு பகரமாக, அது பொருத்தமற்ற திரைப்படங்–களையும், நிகழ்ச்சிகளையும் பார்ப்பத–னாலும் சரி அல்லது இணையதளத்திலும், சமூக ஊடகங்களிலும் எண்ணிக்கையில் அடங்காத பல மணி நேரங்களை வீணாக கழிப்பதனாலும் சரி அதற்கு பகரமாக திருக்குர்ஆன் மற்றும் அதன் போதனைகளின் மூலமாக உங்களது அறிவை அதிகரித்து கொள்வதற்கு நீங்கள் உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனை உங்களது சீர்திருத்தத்திற்கும் அல்லாஹ்வுடன் வலுவான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்குமான வழியாக ஆக்கிக் கொள்ளுங்கள். இந்த குர்ஆன்தான் உங்களை இந்த சமுதாயத்தின் நேர்மறையான பயன்தரக்கூடிய நபராக ஆக்கும். ஜமாஅத்திலுள்ள இளைஞர்களும், குழந்தைகளும், பெரியவர்களும் எல்லோரும் ஒன்றுசேர்ந்து திருக்குர்ஆனின் போதனைகளக்கு ஏற்ப உண்மையான வடிவில் வாழ்க்கையை கழித்தால் பிறகு நாம் உலகில் ஓர் உண்மையான ஆன்மிக மற்றும் நல்லொழுக்க புரட்சிக்கான அடித்தளத்தை அமைக்க முடியும். திருக்குர்ஆனை படிப்பதுடன் பெருமானார் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை மற்றும் தூய நடைமுறை பற்றியும் படிப்பது உங்கள் மீது கடமையாகும். ஏனென்றால், அவர்களின் முழு வாழ்க்கையும் நமக்கு என்றும் அழியாத ஓர் முன்மாதிரி ஆகும். அதனை நாம் கற்க வேண்டும். அதனைப் பின்பற்றிச் செல்ல வேண்டும்.”



குழந்தைகளை சமூக ஊடகங்களின் இழப்புகளிலிருந்து காப்பாற்றுவதற்கான மாபெரும் பொறுப்பு பெற்றோர்கள் மீது இருக்கின்றது. அல்லாஹ்வின் இந்த கட்டளையும், எச்சரிக்கையும் எப்போதும உங்கள் முன்னால் வைத்திருங்கள். அதாவது,

يَآيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا قُوْٓا اَنْفُسَكُمْ وَاَهْلِيْكُمْ نَارًا

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்களையும், உங்கள் சந்ததிகளையும் நெருப்பிலிருந்து காப்பாற்றுங்கள். (அத்தஹ்ரீம் வசனம் 7)

புதிய தொழில்நுட்பம் உள்ளது. கைபேசியும் அதில் உட்படும். கைபேசியின் தவறான பயன்பாட்டின் விளைவாக குழந்தைகளின் ஒழுக்கத்தில் என்னென்ன எதிர்மறை தாக்கங்கள் ஏற்பட முடியுமோ அது தொடர்பாக எச்சரிக்கை செய்தவாறு ஜெர்மனியில் நடைபெற்ற அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் வருடாந்திர இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

பிறகு இன்றைய நாட்களில் குழந்தை–களிடம் இந்த பெரிய நோய் இருக்கின்றது. எங்களுக்கு மொபைல் போன் வாங்கித் தாருங்கள் என்று பெற்றோர்களிடம் கோரிக்கை வைக்கின்றனர். பத்து வயதை அடைந்ததும் மொபைல் போன் கையில் இருக்க வேண்டும் என்கின்றனர். போன் மூலம் மக்களை தொடர்பு கொள்கின்றனர். பிறகு அவர்கள் வழிகெடுக்கின்றனர். தீய பழக்கங்களை ஏற்படுத்துகின்றனர். எனவே கைபேசியும் மிகவும் இழப்பை ஏற்படுத்தும் பொருளாகும். இதில் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு இருப்பதில்லை. இதனாலேயே அவர்கள் தவறான விஷயங்களை செய்கின்றனர். எனவே இதிலிருந்தும் தவிர்ந்திருங்கள். நான் இப்போது கூறியது போன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளலும் கூட CARTOON அல்லது சில நிகழ்ச்சிகள் அறிவுப்பூர்வமானதாக இருக்கின்றன. அவற்றை பார்க்க வேண்டும். ஆனால் மோசமான மற்றும் வீணான எத்தனை நிகழ்ச்சிகள் இருக்கின்றனவோ அவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். (ஜெர்மனியின் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின் வருடாந்திர இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் தேதி ஆற்றிய சொற்பொழிவு)

அல்லாஹ்வின் நம்பிக்கை கொண்ட அடியார்களின் அடையாளங்களில் ஒன்று இதுவாகும். வல்லஸீனஹும் அனில் லக்வி முஃரிளூன் – அவர்கள் வீணான விஷயங்களிலிருந்து முகந்திருப்பிக் கொள்பவர்களாக இருப்பார்கள்.

இந்தக் காலத்தில் வீணான விஷயங்களில் TV, INTERNET மற்றும் சமூக ஊடகங்களும் உள்ளன. இவற்றிலிருந்து தவிர்ந்திருப்பதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

“10 அல்லது 12 வயதான சிறுவர்களிலிருந்து இளம்பெண்கள் வரை TV மற்றும் INTERNET-ஐப் பயன்படுத்துவது இன்றைய நாட்களில் வீணான விஷயங்களில் உட்படுகின்றது. INTERNET–ல் சில நேரங்களில் எத்தகைய இடங்களுக்கு இவர்கள் சென்று விடுகின்றனர் என்றால் அங்கிருந்து அவர்கள் மீண்டும் திரும்ப வர முடியாது. வெட்கமின்மை பரவிக் கொண்டே செல்கிறது. சில நேரங்களில் எத்தகைய விவகாரங்கள் வருகின்றன என்றால் தவறான வகையிலுள்ள GROUP-களில் ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளை ஏதாவது ஒரு வலையில் சிக்க வைத்து விடுகின்றனர். பிறகு அவர்களுக்கு வீட்டை விட வேண்டியது உள்ளது. பிறகு தனது குடும்பத்திற்கும், ஜமாஅத்திற்கும் அவப்பெயரை ஏற்படுத்த அவர்கள் காரணமாகி விடுகின்றனர். எனவே, INTERNET போன்றவற்றிலிருந்து அதிகமாக தப்பிக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இதை தவிர்த்து மூளைகளை விஷம் நிறைந்தவையாக ஆக்குவதற்கு INTERNET–ல் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. தொலைக்காட்சியில் வெட்கமின்மையை வெளிப்படுத்தும் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன. குழந்தைகளின் மூளைகளில் தீய மோசமான தாக்கங்களை ஏற்படுத்துகின்ற அத்தகைய சேனல்களை பெற்றோர்களும் கூட BLOCK செய்து வைக்க வேண்டும். அவை நிரந்தரமாக LOCK–ல் இருக்க வேண்டும். குழந்தைகள் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் TV பார்க்க வேண்டுமென்றால், அவர்கள் பார்க்கவும் செய்கின்றனர். விரும்பும்போது பார்க்கட்டும். ஆனால் தூய்மையான நல்ல DRAMA அல்லது CARTOON பார்க்கலாம். தவறான நிகழ்ச்சிகள் பார்க்கப்படுகிறது என்றால் பிறகு இது தாய் தந்தையின் பொறுப்பாகி விடுகின்றது. மேலும் 10 அல்லது 12 வயதுடைய சிறுமிகளுக்கும் கூட இது சுய உணர்வு அவர்களுக்கு இருக்கும் வயதுதான். எனவே இவற்றிலிருந்து தவிர்ந்திருப்பது அவர்களின் கடமையாகும். நீங்கள் அஹ்மதியாக இருக்கின்றீர்கள். அஹ்மதிகளின் ஒழுக்கம் தனித்தன்மையும், தனிச்சிறப்புமிக்கதாகவும் இருக்க வேண்டும். இவர் அஹ்மதி சிறுமி ஆவார் என்பது தெரிய வர வேண்டும். (ஜெர்மனி லஜ்னா இமாயில்லாஹ்வின் வருடாந்திர இஜ்திமாவின்போது 2011 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17 ஆம் தேதி ஆற்றிய சொற்பொழிவு)

பெற்றோர்கள் மீது இந்த காலத்தில் ஒரு புதிய பொறுப்பு இருக்கின்றது. அதாவது அவர்கள் தமது குழந்தைகளுக்கு TV, MOBILE, INTERNET மற்றும் சமூக ஊடகங்களில் இருக்கும் ஈடுபாடுகளை கண்டிப்பாக கண்காணிக்க வேண்டும். ஏனென்றால், தவறான தொடர்புகளுக்கான விஷயங்கள் பெரும்பாலும் சில நிமிடங்களில் சென்றடைவது சாத்தியமாகி விட்டது. இன்று அத்தகைய பல்வேறு APPS–களும் உள்ளன. அவற்றின் மூலமாக பெற்றோர்கள் பிள்ளைகளின் MOBILE PHONE மற்றும் TABLET மீது SCREENTIME LIMIT–ஐ SET செய்ய முடியும். அவர்களது APP பதிவிறக்கம் செய்யப்படுவது மீது பார்வை வைத்திருக்க முடியும். அவர்கள் சமூக வலைதளங்களில் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை கூட




அவர்களால் பார்க்க முடியும். இவ்வாறே COMPUTER அல்லது LAPTOP–ஐ வீட்டில் எவ்வாறு வைக்க வேண்டும் என்றால் அதன் MONITOR பெற்றோர்கள் கண் முன்னால் இருக்க வேண்டும். ஆனால் கண்காணிப்புடன் பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் மீது நம்பிக்கை இருக்கின்ற சூழலையும் உருவாக்க வேண்டியது அவசியமானதாகும். அதன் மூலம் அவர்கள் அச்சப்படுவதற்கு அல்லது மறைப்பதற்கு பகரமாக தானே தெரிந்து கொள்வதன் மூலமாக சரியானதையும், தவறானதையும் அடையாளங்கண்டு கொள்வர். ஆதலால் அவர்கள் பெற்றோர்களிடமிருந்து ஆலோசனை பெற முடியும். தமது ONLINE ஈடுபாடுகள் தொடர்பாக பெற்றோர்கள் முன்னால் வெளிப்படையாக பேச முடியும். இந்த அளவுகோல்தான் இன்றைய காலகட்டத்தில் பிள்ளைகளின் மார்க்க, நல்லொழுக்க மற்றும் மனரீதியான பாதுகாப்பிற்கான அடித்தளமாகும்.

தாய்மார்களின் பொறுப்பு பற்றி கவனமூட்டியவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் IRELAND–ல் உள்ள தேசிய செயற்குழுவின் பொறுப்பாளர்களுக்கு வழிகாட்டியவாறு இவ்வாறு கூறினார்கள்:

எங்கு ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் ஒன்றாக கல்வி கற்கின்றனரோ அங்கு கல்வி கற்பதில் எந்த குற்றமும் இல்லை. நிபந்தனை என்னவென்றால், ஆண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளுடன் நட்பு வைக்கக் கூடாது. பரஸ்பரம் ஒருவர் மற்றவரிடம் தேவை ஏற்படும்போது மட்டுமே பேச வேண்டும். அவர்களுடன் SMS, FACEBOOK CHAT மற்றும்

தொலைபேசி அழைப்புகள் மூலம் தொடர்பு கொள்வதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். பெண் பிள்ளைகள் மீது கண் வைத்திருக்க வேண்டுமென்று தாய் தந்தையர்க்கு வழிகாட்டுங்கள். எல்லா நேரமும் COMPUTER மற்றும் MOBILE–ஐ கையில் வைத்திருப்பது பொருத்தமானது அல்ல. எந்த தாய்மார்களுக்கு COMPUTER பற்றி தெரியாதோ அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அதன் மூலம் பிள்ளை மீது பார்வை இருந்து கொண்டிருக்க வேண்டும். (தேதிய செயற்குழு கூட்டம் லஜ்னா இமாயில்லாஹ் அயர்லாந்து 18 செப்டம்பர் 2010)

இவ்வாறே பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

இன்று INTERNET அல்லது COMPUTER–ல் பரஸ்பரம் ஒருவர் தம்மை மற்றவரிடம் அறிமுகம் செய்து கொள்வதற்கான ஒரு புதுவழி வந்துள்ளது. அதனை FACEBOOK என்று கூறுகின்றனர். அது அவ்வளவு புதிதொன்றுமல்ல. ஆனால் எந்நிலையிலும் இது பிறகு வந்த சில வருடங்களில் உருவானதாகும். இந்த வழிமுறையிலிருந்து நான் ஒரு முறை தடையும் செய்திருந்தேன். குத்பாவிலும் இது வெட்கங்கெட்ட செயல்களை செய்ய விருப்பத்தை வெளிப்படுத்துகின்றது. பரஸ்பரம் ஒருவருக்கும் மற்றவர்களுக்கும் இடையிலுள்ள திரையை, இரகசியங்களை அகற்றி விடுகின்றது. இரகசியங்களை வெட்ட வெளிச்சத்திற்கு கொண்டு வந்து விடுகின்றது. வெட்கங்கெட்ட செயல்களை செய்ய அழைப்பு விடுகின்றது என்று கூறியிருந்தேன். இது ஒழுக்கத்தின் வீழ்ச்சியின் இறுதி எல்லை இல்லையென்றால் வேறு என்ன? இந்த ஒழுக்கத்தின் வீழ்ச்சி மற்றும் அதன் சீர்கேட்டின் நிலைமையில் ஓர் அஹ்மதி உலகிற்கு ஒழுக்கம் மற்றும் நன்மைகளில் மிக உயர்ந்த தரத்தை எடுத்துக் கூற வேண்டும். (ஜெர்மனியின் ஆண்டு மாநாட்டில் 26 ஜூன் 2011–ல் நிகழ்த்திய நிறைவுரை)

இவ்வாறே சில தர்பிய்யத்தில்லாத புரியும் திறனற்ற அஹ்மதி சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு அஹ்மதி அல்லாத ஆண்களுடன் சமூக ஊடகங்களின் மூலமாக பரஸ்பரம் ஏற்டுகின்ற தொடர்பு இறுதியில் திருமணத்தில் வந்து முடிகின்றது. அத்தகைய திருமணங்களினால் எதிர்மறையான விளைவுகள் வெளிப்பட ஆரம்பித்துள்ளன. அவற்றின் விளைவாக அடுத்த தலைமுறையினர் அஹ்மதியத்தை விட்டு தொலைவில் செல்கின்ற அபாயகரமான அச்சமும் கூட நம் முன்னால் வர ஆரம்பித்திருக்கின்றது. இந்த மிக முக்கியமான விவகாரம் தொடர்பாக எச்சரிக்கை செய்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இன்றோ INTERNET இருக்கின்றது. அதற்கு முன்பும் கூட எங்கெல்லாம் அஹ்மதி பெண்கள் அஹ்மதியல்லாத ஆண்களை திருமணம் செய்துள்ளார்களோ அவர்கள் இப்போது தமது கவலைகளையும், வெட்கத்தையும் வெளிப்படுத்துகின்றனர். ஜமாஅத் அல்லாத நபர்களுடன் திருமணம் செய்து எங்களிடம் இந்த தவறு நிகழ்ந்து விட்டது என்று அவர்கள் எழுதுகின்றனர். தாய்மார்களும் தந்தையும் இந்த விஷயத்தில் அதாவது (பிள்கைளுக்கு) இவ்வாறு பகிரங்கமாக INTERNET–ல் தொடர்புகள் இருக்கக்கூடாது என்பதை கண்காணித்து வர வேண்டும். அன்புடன் புரிய வையுங்கள். நிதானமாக புரிய வையுங்கள். எந்த இளம்பெண்கள் புரிந்து கொள்ளக்கூடிய பருவ வயதை அடைந்து விட்டனரோ சுயமே அவர்களும் கூட விழித்தெழ வேண்டும். இல்லையென்றால் நினைவில் கொள்ளுங்கள். அஹ்மதி தாய்மார்களின் வயிற்றிலிருந்து வெளிவரும் பிள்ளைகளை அவர்கள் அந்நியர்களின் மடியில் போட்டு கொண்டிருப்பர். நீங்கள் ஏன் உங்கள் மீதும், உங்களது சந்ததிகள் மீதும் அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? (19 அக்டோபர் 2003–ல் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் நடைபெற்ற லஜ்னா இமாயில்லாஹ் UK–ன் வருடாந்திர இஜ்திமாவின் சந்தர்ப்பத்தில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)

இந்த விஷயமும் உண்மையாகும். இளைஞர்களை சமூக ஊடங்களின் தவறான தாக்கங்களில் இருந்து தடுப்பது மட்டும் போதுமானதல்ல. மாறாக, அதற்கு எதிரில் சாதகமான ஆரோக்கியமான மாற்று ஏற்பாடு செய்வதும் அவசியமானதாகும். இளைஞர்கள் சமூக ஊடகங்களின் பலனில்லாத அல்லது இழப்பை ஏற்படுத்துகின்ற விஷயங்களில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் என்று நாம் விரும்பினால் பிறகு நாம் அவர்களுக்கு சமூக ஊடகங்களிலுள்ள மார்க்க ரீதியிலுள்ள, அறிவுப்பூர்வமான, இறைஞானமிக்க, தர்பிய்யத் தொடர்பான விஷயங்களுடன் இணைவதற்கான சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். சமூக ஊடகங்களின் எதிர்மறை தாக்கங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கான சிறந்த தாக்கத்தை ஏற்டுத்தும் வழிமுறை இதுவாகும். அதாவது நாம் நமது கவனத்தை அல்லாஹ் இந்த காலத்தில் கிலாஃபத்தின் அருளினால் நமக்காக தொண்டு செய்ய வைத்திருக்கின்ற அந்த ஆன்மிக வழிகளின் பக்கம் திருப்ப வேண்டும். கலீஃபத்துல் மஸீஹின் குத்பாக்கள், கட்டளைகள், சொற்பொழிவுகள், ஆன்மிக சபைகள் ஆகியவற்றை பார்ப்பதற்கும், கேட்பதற்கும், படிப்பதற்கும் இன்று எண்ணற்ற புதிய வழிகள் உள்ளன. அவற்றின் மூலமாக தர்பிய்யத்தின் வழிகள் முன்பை விட எவ்வளவோ அதிகமாக எளிதாக ஆக்கப்பட்டிருக்கின்றன. MTA–வின் SATELITE CHANNELS, YOUTUBE, MOBILE APPS, ஜமாஅத் பத்திரிகைகள் மற்றும் மாத இதழ்கள் உதாரணமாக பத்ர், அல்ஹகம் மற்றும் அல்ஃபஸ்ல் ஆகியவற்றில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ பேருரைகள், சுற்றுப் பயணங்களின் அறிக்கைகள், சந்திப்புகள், வழிகாட்டல்கள் ஆகியவற்றின் விபரங்கள் வெளியிடப்படுகின்றன. இந்த அனைத்தும் எத்தகைய வசதிகளாக உள்ளன என்றால் அவை கிலாஃபத்துடன் நம்மை இணைக்கின்றன. ஈமானில் வலிமையை ஏற்படுத்துகின்றன. ஆன்மிக புத்துணர்வை ஏற்படுத்துகின்றன. எனவே சமூக ஊடகங்கள் குறிக்கோளற்ற ஈடுபாடுகள் மற்றும் எண்ணங்கள் அசுத்தமாக்குவதற்கான வழியாக ஆக முடியும் என்றால்

அதற்கான சிறந்த தீர்வு நாம் நமது இதே புதிய வழிமுறைகளை கிலாஃபத்தின் குரலைக் கேட்பது, மார்க்க அறிவைக் கற்பது மற்றும் நமது சந்ததிகளின் தர்பிய்யத்திற்காக பயன்படுத்துவதே ஆகும். வசதிகளுக்கு எந்தக் குறைவும் இல்லை. நாம் அதிலிருந்து பயன்பெற ஆரம்பிக்க வேண்டும் என்ற தேவை மட்டுமே இருக்கின்றது.

MTA–வில் ஒவ்வொரு அருளுக்குரிய ஜுமுஆ நாளன்று THIS WEEK WITH HUZOOR என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பப்படுகிறது. அதில் ஹுஸூர் அவர்கள் அந்த ஒரு வாரம் கலந்து கொண்டிருந்த நிகழ்ச்சிகள், கூட்டங்கள், சந்திப்புகள் ஆகியவற்றில் அவர்கள் வழங்கியிருந்த முக்கிய வழிகாட்டல்கள் பற்றி சுருக்கமாக எடுத்துரைக்கப் –படுகின்றது. இந்த ஆன்மிக உணவுத்தட்டில் இருந்து பயனடைந்தவாறு ஜமாஅத்தின் இளைஞர்கள் தமது நல்லொழுக்கம், சீர்திருத்தம் மற்றும் ஆன்மீக தரத்தை மிகவும் மேலானதாக ஆக்கிக் கொள்ள முடியும். FRIDAY SERMON FOR KIDS என்ற நிகழ்ச்சி MTA–விலும், YOUTUBE–லும் இருக்கின்றது. அதன் மூலம் குழந்தைகளுக்கு கூட ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரைகளிலிருந்து பயன்பெறுவதற்கான ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜுமுஆ குத்பாக்களிலிருந்து குறிப்புகள் எடுப்பது மற்றும் அந்த உண்மைகளையும் இளைஞர்களுக்கு எளிமையான மொழியில் புரிய வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. MTA–வில் வருகின்ற பல்வேறு DOCUMENTRIES, அறிவுப்பூர்வமான தகவல்களை தருகின்ற கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் மற்றும் குழந்தைகளின் ஆர்வத்தை தூண்டுகின்ற




நிகழ்ச்சிகள் வருகின்றன. அதன் பக்கம் குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கவனத்தை ஈர்க்க வேண்டிய தேவை இருக்கின்றது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சமூக ஊடகங்களின் தீய தாக்கங்களிலிருந்து காப்பாற்றுவதற்காக இளைஞர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்து அதில் அவர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக போதனை செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இன்றைய நாட்களில் சமூக ஊடகங்களில் பல்வேறு தீமைகள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. இளைஞர்களும்,





இளம் பெண்களும் தாய், தந்தையர்க்கு முன்னால் அமைதியாக CHATTING செய்து கொண்டிருக்கின்றனர். தூதுச் செய்திகள் மற்றும் புகைப்படங்களை ஒருவர் மற்றவருக்கு அனுப்பி வைத்து கொண்டிருக்கின்றனர். புதிய புதிய PROGRAMME–களில் ACCOUNT (கணக்கு) வைக்கப்படுகின்றது. முழு நாளும் PHONE, I-PAD மற்றும் COMPUTER போன்றவற்றில் அமர்ந்தவாறு நேரம் வீணாக்கப்படுகின்றது. இதனால் ஒழுக்கம் சீர்கெட்டு விடுகின்றது. இயல்பில் கடுமை உருவாகி விடுகின்றது. பிள்ளைகளை நாம் பார்த்துக் கொண்டிருக்கும் நிலையிலேயே அவர்கள் நமது கைகளிலிருந்து நழுவிச் சென்று விடுகின்றனர். இந்த எல்லா விஷயங்களின் மீதும் பார்வையை வைத்திருப்பதும் அவற்றை குறிப்பட்ட எல்லைக்குட்பட்டதாக ஆக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. இதற்காக நீங்கள் அவர்களுக்கான மாற்று ஏற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்துவது தொடர்பாகவும் சிந்திக்க வேண்டும். அவர்களை வீட்டு வேலைகளில் ஈடுபடுத்துங்கள். ஜமாஅத் தொண்டுகளில் பங்கு பெற வையுங்கள்.அவர்களை எந்த விஷயங்களில் ஈடுபாடு உள்ளவர்களாக ஆக்க வேண்டும் என்றால் அது அவர்களுக்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ளதாகவும், சாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். (10 ஜூலை 2016–ல் ஜெர்மனியில் நடைபெற்ற லஜ்னா இமாயில்லாஹ்வின் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் ஹுஸூர் அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி)

(தொடரும்...)

# இஃஜாஸுல் மஸீஹ் (மஸீஹின் அற்புதம்)

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)



6

✧✧✧ தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A. ✧✧✧

### முதல் அத்தியாயம்

#### இந்த சூராவின் பெயர்களும் அதனுடன் தொடர்புடைய பிற விஷயங்களும்

இந்த சூராவுக்கு பல பெயர்கள் இருக்கின்றன என்பதை அறிந்து கொள்ளுங்கள். முதல் பெயர் فَاتِحَةُ الْكِتَابِ (ஃபாத்திஹதுல் கிதாப்) என்பதாகும். இதற்கு இந்தப் பெயர் வைக்கப்பட்டதற்குக் காரணம், திருக்குர்ஆன், தொழுகை மற்றும் படைப்பாளர்களுக்கெல்லாம் படைப்பாளனாக இருப்பவனிடம் துஆ கேட்கும்போது இதிலிருந்து துவக்கப்பட வேண்டும் என்பதாகும். என்னைப் பொருத்தவரை, இதற்கு சூரா ஃபாத்திஹா என்று ஏன் பெயர் வைக்கப்பட்டுள்ளது என்றால், அல்லாஹ் திருக்குர்ஆனுக்கு இதை حَكَمٌ (ஹகம் - தீர்ப்பு கூறுவது) ஆக ஆக்கியிருக்கிறான். மேலும் பேரருளாளனிடமிருந்து தகவல்களும், இறைஞானங்களும் இதில் நிரப்பப்பட்டிருக்கின்றன. மேலும் துவக்கத்தையும், முடிவையும் பற்றிய ஞானத்திற்காக மனிதனுக்கு என்ன தேவைப்படுகின்றனவோ, அவற்றின் தொகுப்பாக இந்த சூரா இருக்கிறது. எடுத்துக்காட்டாக, உண்மையான படைப்பாளனின் இருப்பைப் பற்றிய சான்றை எடுத்து வைப்பது, இறையடியார்களிடம் நுபுவ்வத், கிலாஃபத் ஆகியவற்றின் தேவை, அதில் அனைத்தையும் விட மகத்தான, மிகப் பெரிய செய்தியாகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலம், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியின் காலம் ஆகியவற்றைப் பற்றிய நற்செய்தியைக் வழங்குகிறது. நாம் பேரன்பாளனாகிய இறைவனின் நல்வாய்ப்பினால் இது குறித்த விஷயத்தை அதன் இடத்தில் குறிப்பிடுவோம்.

மேலும் (ஃபாத்திஹாவாகிய) இதன் செய்திகளில் ஒன்று, இந்த அற்பமான உலகின் வயது பற்றி அது செய்தி தெரிவிக்கின்றது. ஓரிறைவனால் வழங்கப்பட்ட ஆற்றலினால் அதையும் நாம் எழுதுவோம். இந்த சூரா ஃபாத்திஹாவைப் பற்றித்தான் நபிமார்களில் ஒரு நபி (அதாவது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அறிவிப்பு செய்திருந்தார். அவர் இவ்வாறு கூறினார்: நான் வல்லமையுள்ள ஒரு வானவரை வானத்திலிருந்து இறங்குவதாகப் பார்த்தேன். மேலும் அவருடைய கையில் சிறிய நூல் வடிவில் சூரா ஃபாத்திஹா இருந்தது. மேலும் ஆற்றல் மிக்க இறைவனின் கட்டளையால் அந்த வானவரின் வலது கால் கடலிலும், இடது கால் காய்ந்த இடத்திலும் பதிந்தது. மேலும் (வானவராகிய) அவர் பிடரி மயிரைக் கொண்ட சிங்கம் கர்ஜிப்பது போன்று மிகப் பெரிய குரலில் அழைத்தார். அவருடைய இந்த ஓசையால் ஏழு இடிகள் வெளிப்பட்டன. அவற்றில் ஒவ்வோர் இடியிலும் (இறை)கூற்று காணப்பட்டிருந்தது. மேலும் இடியின் கூற்றுகளை தொகுத்து முத்திரையிட்டு விடுங்கள்; அவற்றை எழுதாதீர்கள் எனக் கூறப்பட்டது.

பேரன்பாளனாகிய இறைவன் அவ்வாறே கூறினான். இறங்குகின்ற வானவர் எவனுடைய ஒளி நதிகளின், குடியிருப்புகளின் திசையை ஒளிமயமாக்கி இருக்கிறதோ அந்த உயிருள்ள இறைவனின் மீது ஆணையிட்டுக் கூறினார்: இந்தக் காலத்திற்குப் பிறகு எந்தக் காலமும் இத்தகைய மகத்துவமிக்கதாக இருக்காது. இறைவனின் இந்த செய்தி (அதாவது முன்னறிவிப்பு) வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்துடன் தொடர்புடையது என்பதில் விரிவுரையாளர்கள் ஒன்றுபட்ட கருத்து கொண்டுள்ளார்கள். மேலும் நிச்சயமாக அந்தக் காலம் வந்து விட்டது.

மேலும் اَلسَّبْعُ الْمَثَانِيْ (அஸ்ஸப்வுல் மஸானீ - திரும்பத் திரும்ப ஓதும் ஏழு வசனங்கள்) என்பதிலிருந்து (15:88 காண்க) அந்த ஏழு குரல்கள் வெளிப்பட்டு விட்டன. மேலும் இந்தக் காலம் நன்மைக்கும், நேர்வழிக்கும் இறுதி காலமாகும். மேலும் இதற்குப் பிறகு எந்தக் காலமும் சிறப்பிலும், அந்தஸ்திலும் இந்த மாதிரி இருக்காது. மேலும் எவருடைய சந்ததியைப் பற்றி என் இறைவன் முன்னரே கூறி விட்டானோ அந்த நபரைத் தவிர★ நாம் இந்த உலகத்திற்கு விடை கொடுக்கும்போது நமக்குப் பிறகு மறுமை நாள் வரை வேறு எந்த மஸீஹும் இருக்க மாட்டார்; எவரும் வானத்திலிருந்து இறங்கவும் மாட்டார்; குகையிலிருந்து வெளி வரவும் மாட்டார்.

இந்த முன்னறிவிப்பு முற்றிலும் உண்மையாகும். படைப்பாளனாகிய இறைவனிடமிருந்து இறங்கவிருந்தவர்

---

★வாக்களிக்கப்பட்ட மஸீஹ் திருமணம் செய்வார். அவருக்கு குழந்தைகள் வழங்கப்படும் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸில் இதன் பக்கமே சுட்டிக் காட்டப்பட்டுள்ளது - நூலாசிரியர்.

இந்த ஹதீஸ் சுனன் அபீ தாவூது, முஸ்னது அஹ்மது, அல் முஃஜமுல் கபீர் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ளது - மொழிபெயர்ப்பாளர்.

இறங்கி விட்டார். மேலும் வானமும் பூமியும் அதற்கு சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நீங்களோ இந்த சாட்சியியை அறியாமல் இருக்கின்றீர்கள். மேலும் ஒரு காலம் கடந்து சென்று விட்ட பிறகு நீங்கள் என்னை நினைவு கூர்வீர்கள். ஆனால் காலத்தைப் பெற்றவர், அதை கவனமின்மையால் வீணாக்காதவர் நற்பேறு பெற்றவர் ஆவார்.

இப்போது நாம் மீண்டும் எமது முந்தைய கூற்றின் பக்கம் திரும்புகிறோம். பின்னர் அறிவுள்ளவர்களே! என்னுடைய விஷயத்தைக் கேளுங்கள். (சூரா) ∴பாத்திஹாவுக்கு இன்னும் பல பெயர்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று, سُوْرَةُ الْحَمْد (சூரத்துல் ஹம்து - புகழைக் கொண்ட சூரா) என்பதாகும். ஏனெனில் இது நமது பெருமைக்குரிய மேலான இறைவனின் حَمْد (ஹம்து - புகழ்) என்பதிலிருந்து துவங்குகிறது. இதன் இன்னொரு பெயர் اُمُّ الْقُرْآنِ (உம்முல் குர்ஆன் - குர்ஆனின் தாய்) என்பதும் ஆகும். இதன் பெயருக்கான காரணம் என்னவென்றால், இந்த சூரா திருக்குர்ஆனின் அனைத்து கருத்துகளையும் மிகவும் அழகிய முறையில் தொகுத்திருக்கிறது. மேலும் ஒரு சிப்பியைப் போன்று இது புகழுக்குரிய (உண்மையையும், பொய்யையும் பிரித்தறிவிக்கக் கூடியது எனும்) ∴புர்கானை எல்லா முத்துகளையும் தன்னிடம் கொண்டிருக்கிறது. மேலும் இறைஞானம் எனும் பறவைகளுக்கு இது கூட்டைப் போன்றதாகும்.

நிச்சயமாக திருக்குர்ஆன் தனது வழிகாட்டல்களில் நான்கு ஞானங்களையும் ஒருங்கே கொண்டுள்ளது. அதாவது, (1) துவக்கத்தின் அறிவு, (2) திரும்புதலின் அறிவு, (3) நுபுவ்வத்தின் அறிவு, (4) இறைவனின் தவ்ஹீது மற்றும் அவனது பண்புகளைப் பற்றிய அறிவு. சந்தேகமின்றி, இந்த நான்கு ஞானங்களும் சூரா ∴பாத்திஹாவில் இருக்கின்றன. மேலும் உம்மத்தின் பெரும்பாலான இதயங்களில் உயிருடன் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் அதைப் படிக்கின்றார் -கள்தான். ஆனால் அது அவர்களின் தொண்டைக்குக் கீழே இறங்குவதில்லை. அவர்கள் அதன் ஏழு ஆறுகளையும் வெட்டி ஓட விடுவதில்லை. மாறாக, அவர்கள் தீய நடத்தையுடையவர்களைப் போன்ற வாழ்க்கையை நடத்துகின்றனர்.

இந்த சூராவில் ஒருங்கே கொண்ட அனைத்து போதனைகளும் காணப்படுகின்றன என்ற அடிப்படையிலும், இதற்கு اُمُّ الْكِتَابِ (உம்முல் கிதாப் - இறைநூலின் தாய்) என்ற பெயர் இருக்கலாம். ஏனெனில் இறைநெறியில் நடப்பவர்களின் உள்ளங்களில் ருபூபிய்யத் (பரிபாலிக்கும் பண்பு) பற்றிய கண்ணியமும், உபூதிய்யத் (இறைவனுக்கு அடிமைத்துவமாக இருக்கும் பண்பு) பற்றிய தன்னடக்கமும் முழுமையான முறையில் ஏற்படாத வரை இறைநெறியில் நடப்பது என்பது முழுமையடைய முடியாது. இந்த விஷயத்தில் நீர் ஓரிறைவனிடமிருந்து வந்த சூரா ∴பாத்திஹாவைப் போன்ற எந்த வழிகாட்டியையும் காண மாட்டீர். اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ (அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் - எல்லாப் புகழ்களும் அல்லாஹ்வுக்கே உரியன 1:3) என்ற வசனத்திலிருந்து مٰلِكِ يَوْمِ الدِّيْنِ மாலிகி யவ்மித்தீன் - அவன் தீர்ப்பு நாளின் எஜமான் 1:4) என்பது வரையிலான கூற்றினால் அல்லாஹ் தனது கண்ணியத்தையும், மகத்துவத்தையும் எவ்வாறு பகிரங்கமான முறையில் வெளிப்படுத்தி இருக்கிறான் என்பதை நீர் பார்க்கவில்லையா?

பிறகு اِيَّاكَ نَعْبُدُ وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ (இய்யாக ந∴ புது வ இய்யாக நஸ்தயீன் - நாங்கள் உன்னையே வணங்குகிறோம் மேலும் உன்னிடமே உதவி தேடுகிறோம் 1:5) என்ற வசனத்தில் அடியாரின் சீரமைப்பில்லாத நிலை, இயலாமை, அவருடைய பலவீனம் ஆகியவற்றை வெளிப்படுத்தி இருக்கிறான். மேலும் மனித இயல்பின் அனைத்து தேவைகளையும் கருத்தில் கொண்டவாறு இந்த சூராவுக்கு اُمُّ الْكِتَابِ (உம்முல் கிதாப் - இறை நூலின் தாய்) என்றும் பெயர் வைக்கப்பட்டிருக்கலாம். மேலும் இறை ஈர்ப்பு அல்லது முயற்சி செய்வது ஆகியவற்றின் மூலமாக (மனித) இயல்புகள் என்ன நாடுகின்றனவோ அவற்றின் பக்கம் சுட்டிக் காட்டுவது நோக்கமாக இருக்கலாம். ஏனெனில் மனிதன் தனது மனதை முழுமைப்படுத்துவதற்காக தனக்கு அல்லாஹ், அவனது பண்புகள், செயல்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவு கிடைக்க வேண்டும் என விரும்புகிறான். மேலும் தனக்கு இறை திருப்தியைப் பற்றிய ஞானம் என்பது, இறைவனின் கூற்றுகளின் உண்மை நிலையின் மூலமாக தெளிவாகின்ற அவனுடைய அந்தக் கட்டளைகளின் மூலமாகக் கிடைக்க வேண்டும் என்றும் மனிதன் விரும்புகிறான். அவ்வாறே இறைவனின் அருள் தன்னை அரவணைக்க வேண்டும் என்றும், அவனது அருளாலேயே தனது அகத்தின் சுத்தமும், ஒளிகளும், இறைவனைப் பற்றிய (ஆன்மிகக் கனவுகள் எனும்) கஷ்∴புகளும் கிடைக்க வேண்டும் என்றும் அவனது ஆன்மிகம் எதிர்பார்க்கிறது. இந்த கண்ணியத்திற்குரிய சூரா இந்த கருத்துகளையே உள்ளடக்கியதாக இருக்கிறது. இன்னும் கூறுவதென்றால், இந்த சூரா தனது அழகிய முறையில் எடுத்துரைப்பது மற்றும் ஆற்றலை வெளிப்படுத்துவது ஆகியவற்றின் காரணமாக இந்தக் கருத்துகளின் பக்கம் ஈர்க்கக் கூடியதாக இருக்கிறது.

இந்த சூராவின் இன்னொரு பெயர், اَلسَّبْعُ الْمَثَانِيْ (அஸ்ஸப ∴வுல் மஸானீ - திரும்பத் திரும்ப ஓதுவது) என்பதாகும். (திருக்குர்ஆன்: 15:88 காண்க - மொழிபெயர்ப்பாளர்). இதன் பெயருக்கான காரணம் என்னவெனில், இது இரண்டு பகுதி -களைக் கொண்டுள்ளது. அதன் பாதி பகுதி, அடியார் தன்னை படைத்து பரிபாலிக்கின்றவனை புகழ்வதாகும். மேலும் இன்னொரு பகுதி, மாய்ந்துபோகும் அடியாருக்காக இறைவன் புறமிருந்து கிடைக்கும் அருட்கொடையைக் கொண்டதாகும். மற்ற எல்லா இறை நூல்களை விட்டும் (சூரா ∴பாத்திஹா ஆகிய) இது விதிவிலக்கானதாகும். இதற்கு நிகரானது தவ்ராத்திலும் காணப்படுவதில்லை இஞ்சீலிலும் காணப்படுவ -தில்லை. மற்ற நபிமார்களின் மறை நூல்களிலும் காணப்படுவ -தில்லை என்ற காரணத்தாலும் இதற்கு مَثَانِيْ மஸானீ - திரும்பத் திரும்ப ஓதக்கூடியது) என்ற பெயர் வழங்கப் -பட்டுள்ளது.

இதற்கு مَثَانِيْ மஸானீ - திரும்பத் திரும்ப ஓதக்கூடியது) என்ற பெயர் வைக்கப்பட்டதற்கு ஒரு காரணமாக இவ்வாறும் கூறப்படுகிறது: கருணையுள்ள இறைவனிடமிருந்து ஏழு வசனங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒவ்வொரு வசனத்தை ஓதுவதும் (குர்ஆனுல் அழீம் - மகத்தான குர்ஆன்) என்பதன் ஒரு பகுதியை ஓதுவதற்கு சமமானதாகும்.

இதற்கு سَبْعٌ (சப்அ - ஏழு) என்று பெயர் வைத்ததற்குக் காரணம், நரகத்தின் ஏழு வாசல்களை சுட்டிக் காட்டுவதற்காக இருக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஒவ்வொரு வாசலுக்கும் இந்த சூராவின் நியமிக்கப்பட்ட பகுதி இருக்கிறது. அது ரஹ்மான் ஆகிய இறைவனின் கட்டளையால் அதன் தீச்சுவாலைகளை அகற்றுகிறது. நரகத்தின் இந்த ஏழு வாசல்களை சரியாகவும், பாதுகாப்பாகவும் கடந்து செல்ல விரும்புபவருக்கு இந்த ஏழு வசனங்களிலும் நுழைவது, இவற்றுடன் நேசத்தை உருவாக்குவது, ஆற்றல் மிக்க இறைவனிடம் அவற்றில் உறுதியாக நிலைநிற்பதற்கு வேண்டுபவராக இருப்பது ஆகியவை கடமையாகும். ஒழுக்கம், செயல்கள், கொள்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புடையதும், நரகத்தில் நுழைக்கின்றதுமாகிய அப்படிப்பட்ட தீமைகள் அடிப்படையான முறையில் நாசமாக்கக் கூடிய ஏழு விஷயங்கள் இருக்கின்றன. மேலும் இந்த ஏழு (வசனங்கள்) அந்தக் கடுமைகளிலிருந்து காப்பாற்றக் கூடியவையாகும்.

ஹதீஸ்களில் (சூரா ∴பாத்திஹாவாகிய) இதற்கு இன்னும் பல பெயர்கள் வந்துள்ளன. ஆனால் உமக்கு இதுவே போதுமானதாகும்.

ஏனெனில் இது முற்றிலும் இரகசியங்களின் ஒரு கருவூலமாகும். அது மட்டுமின்றி, (ஏழு என்ற) இந்த எண்ணிக்கையில் வரையறுத்தியிருப்பது, (படைப்பின்) தொடக்கத்திலிருந்து திரும்பி வந்து சேரும் (மறுமை) வரையிலான ஒரு காலத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது இதன் ஏழு வசனங்கள் உலகின் ஆயுளைச் சுட்டிக் காட்டுகிறது. எனவே அது ஏழாயிரம் ஆண்டுகள் ஆகும். இந்த வசனங்களிலிருந்து ஒவ்வொரு வசனமும் சென்ற கால ஆயிரம் ஆண்டுகளின் நிலைமையைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும் இந்தக் கடைசி ஆயிரம் ஆண்டுகளோ வழிகேட்டில் மிகவும் அதிகமாக இருக்கிறது. சூரா ∴பாத்திஹாவின் தொடக்கத்திலிருந்து முடிவு வரையுள்ள கருத்துகளை தாங்கியுள்ளதைப் போன்று, இந்த இடம் அந்தக் காலகட்டத்தை விளக்கிக் கூறுவதற்குத் தேவையானதாக இருந்தது.

சுருக்கமாக, இந்த சூரா ஓர் உறுதி வாய்ந்த கோட்டையும், மிகத் தெளிவான ஒளியும் ஆகும் கற்றுக் கொடுக்கக் கூடியதும். உதவி செய்யக் கூடியதும் ஆகும். மிக உயர்ந்த அழகிய கட்டமைப்பினால் (நாட்டின்) எல்லைப் புறங்கள் பாதுகாக்கப்படுவது போன்று (சூரா ∴பாத்திஹா ஆகிய) இது திருக்குர்ஆனின் கட்டளைகளை எல்லாவிதமான அதிகமாவது, குறைவது ஆகியவற்றிலிருந்து பாதுகாத்து வைக்கிறது. இதன் எடுத்துக்காட்டு, தேவையான பொருள்கள் அனைத்தையும் தனது முதுகில் சுமந்திருக்கின்ற, தன் மீது ஏறி அமர்ந்திருக்கின்றவரை அன்பிற்குரிய (இறை)வன் வரை கொண்டு சேர்க்கின்ற அந்த ஒட்டகத்தைப் போன்றதாகும். மேலும் அதன் மீது எல்லா வகையான பயண உணவுகளும், இறைச்சிகளும் உடைகளும், துணிகளும் சுமத்தப்பட்டுள்ளன. அல்லது அதன் எடுத்துக்காட்டு, அதிக தண்ணீர் இருக்கின்ற அந்த சிறு குளத்தைப் போன்றதாகும். அதாவது அது கடல்களின் சங்கமம் ஆகும். அல்லது அலைமோதும் பெருங்கடலைக் கடந்து செல்லும் இடமாகும்.

இந்த கண்ணியத்திற்குரிய சூராவின் பயன்களும், அருள்களும் எல்லையற்றவையும், எண்ணிலடங்காதவையும் ஆகும் என நான் பார்க்கின்றேன். மேலும் மனிதன் அவற்றை கணக்கிடுவதன் இந்த ஆசையில் தனது முழு ஆயுளையும் செலவு செய்து விட்டாலும் அது அவனுடைய ஆற்றலுக்கு உட்பட்டதன்று. வழிதவறியவர்களும், தீயவர்களும் தமது முட்டாள்தனம் மற்றும் மழுங்கிய மூளை ஆகியவற்றின் காரணமாக இந்த சூராவுக்கு அதற்குரிய முறையில் மதிப்பளிக்கவில்லை. அவர்கள் அதைப் படித்தனர். ஆனால் அதை மீண்டும் மீண்டும் ஓதியும் அவர்கள் அதன் அழகையும், மேன்மையையும் அறியவில்லை. அடையாளம் கண்டு கொள்ளவில்லை. இந்த சூரா நிராகரிப்பவர்களுக்கு முழுமையான ஒரு எக்காளம் ஓசை ஆகும். ஒவ்வொரு நேர்மையான உள்ளத்திற்கும் மிக விரைவில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். எவர் ஆய்வு செய்பவர்களைப் போன்று இது பற்றி சிந்திப்பாரோ, ஒளிமிக்க விளக்கைப் போன்று ஒளிமிக்க சிந்தனையுடன் இதை அருகிலிருந்து படிப்பரோ, அவர் இதை கண்களின் ஒளியாகவும், இரகசியங்களின் திறவுகோலாகவும் காண்பார். மேலும் சந்தேகமின்றி, இது உண்மையைக் கொண்டது ஆகும்; இது ஊகம் அல்ல.

உமக்கு இதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால், எழுவீராக; அனுபவத்தால் சோதித்துப் பார்ப்பீராக. சோம்பலையும் சோம்பேறித்தனத்தையும் விட்டு விடுவீராக. இங்குமங்கும் தேவையில்லாமல் கேள்வி கேட்காதீர். இந்த சூராவின் அதிசயங்களில் ஒன்று, இது அல்லாஹ்வைப் பற்றிய ஞானத்தை வழங்கியிருக்கிறது. இந்த சூராவின் அற்புதங்களில் ஒன்று, (சூரா ∴பாத்திஹா ஆகிய) இதில், எந்த மனிதனும் அதிகப்படுத்தும் ஆற்றல் இல்லாத அளவிலான அத்தகைய ஞானத்தை வழங்கி இருக்கிறது. அல்லாஹ் நமக்கும், நமது சமுதாயத்திற்கும் இடையே சூரா ∴பாத்திஹாவின் மூலமாக தீர்ப்பு வழங்குவானாக. நமது தவக்குல் (நம்பிக்கை) அவன் மீதே இருக்கிறது. ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

## இரண்டாவது அத்தியாயம்

∴பாத்திஹாவையும் திருக்குர்ஆனையும் ஓதுவதற்கு முன்னர் கூறப்படுகின்ற சொற்களாகிய اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ (அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம் - விரட்டப்பட்ட ஷைத்தானிடமிருந்து நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்) என்பதன் விளக்கம்

இறைஞானத்தைத் தேடுபவரே! எவர் ∴பாத்திஹாவை -யும் புகழுக்குரிய குர்ஆனையும் ஓதத் தொடங்குவாரோ, அவர், திருக்குர்ஆனில் வந்திருப்பதைப் போன்று, اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ (அவூது பில்லாஹி மினஷ்ஷைத்தானிர் ரஜீம்) என்று ஓதி ஷைத்தானிடமிருந்து (அல்லாஹ்விடம்) பாதுகாவல் தேட வேண்டியது அவருக்குக் கட்டாயமாகும்

---

இந்த நூல் அறைகூவலாக எழுதப்பட்ட பீர் மஹ்ர் அலி என்பரை விளித்துக் கூறியதாகும். ஆயினும் போட்டியாக இதற்கு விளக்கவுரை எழுத விரும்பும் அனைவருக்கும் இது பொருந்தும் - மொழிபெயர்ப்பாளர்.

என்பதை அறிந்து கொள்வீராக. ஏனெனில் கண்ணியத்திற்குரிய இறைவனின் பச்சைப் பசுமையான இடத்தில், குற்றமற்ற சிறப்பான அவனது அடியார்களுக்காக தனித்தன்மை வாய்ந்ததாக ஆக்கப்பட்டுள்ள அவனது கண்ணியத்திற்குரிய இடத்தில் ஷைத்தான், திருடர்களைப் போன்று நுழைகின்றான். எனவே அவர்கள் சூரா ஃபாத்திஹாவை, மக்களுடைய இறைவனின் கூற்றை ஓதும் நேரத்தில் அல்லாஹ் தனது அடியார்களை ஷைத்தானின் தாக்குதல்களிலிருந்து இரட்சிப்பை வழங்கவும், தனது ஆயுதத்தால் அவனை தொலைவில் அகற்றவும், (ஷைத்தானாகிய) அவனது தலையில் கோடாரியால் அடிக்கவும், கவனமற்றவர்களின் கவனமின்மை எனும் கனவிலிருந்து இரட்சிப்பை வழங்கவும் அவன் விரும்பினான்.

எனவே விரட்டப்பட்ட ஷைத்தானை மறுமை நாள் வரை விரட்டியடிப்பதற்காக அவன் தன்னிடமிருந்து تَعَوُّذ (தஅவ்வுது - பாதுகாப்பு தேடுவது) எனும் ஒரு சொல்லைக் கற்றுக் கொடுத்தான். மறைந்திருக்கும் இந்த விஷயத்தில் உள்ள இரகசியம் என்னவெனில், ஷைத்தான் நெடுங்காலமாக மனிதனுக்குப் பகைவனாக இருக்கிறான். மேலும் அவன் மறைவான வழிமுறையில் மனிதனை அழிக்கவும், நாசமாக்கவும் விரும்புகிறான். மனிதனை நாசமாக்குவது அவனுக்கு விருப்பமான வேலையாகும். இந்த நோக்கத்திற்காக, ரஹ்மான் ஆகிய இறைவன் சுவர்க்கத்தின் பக்கம் அழைப்பதற்கான கட்டளையை இறக்கும்போது (ஷைத்தான் ஆகிய) அவன் அதை காது கொடுத்துக் கேட்டுக் கொண்டிருப்பதையும், வழிகேடு மற்றும் குழப்பத்தை உருவாக்குவதற்காக தனது முழு முயற்சியையும் செலவு செய்வதையும் தன் மீது கட்டாயமாக்கிக் கொண்டான்.

எனவே அல்லாஹ் நபிமார்களை தோற்றுவிப்பதன் மூலமாக (ஷைத்தான் ஆகிய) அவனுக்காக தோல்வியையும், துக்கங்களையும் விதித்து விட்டான். மேலும் (இறைவனாகிய) அவன் (ஷைத்தானாகிய) அவனை அழித்து விடவில்லை மாறாக, சிறப்பான, மேலான அல்லாஹ்வின் கட்டளையால் இறந்தவர்கள் உயிர்த்தெழும் நாள் வரை (இறைவனாகிய) அவன் (ஷைத்தானாகிய) அவனுக்கு காலக்கெடுவைக் கொடுத்திருக்கிறான். மேலும் اَلشَّيْطَانِ الرَّجِيْمِ (அஷ்ஷைத்தானிர் ரஜீம் - விரட்டப்பட்ட ஷைத்தான்) என்ற சொல்லில் (ஷைத்தான் ஆகிய) அவனுடைய அழிவைப் பற்றிய நற்செய்தி வழங்கப்பட்டுள்ளது. இதுதான் بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ (பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்) என்பதற்கு முன்னர் ஓதப்படுகின்ற تَعَوُّذ (தஅவ்வுது - பாதுகாப்பு தேடுவது) என்ற சொல் ஆகும். மேலும் எவனைப் பற்றி எச்சரிக்கை இறங்கி இருக்கிறதோ அவன்தான் رَجِيْمٌ ரஜீம் - விரட்டப்பட்டவன்) ஆவான். இதன் மூலம் (நான் கூற வந்த) எனது கருத்து, அவன் தஜ்ஜால் ஆவான். அழிக்கக் கூடியவராகிய மஸீஹ் அவனை கொலை செய்து விடுவார். அரபு மொழி நூல்களில் தெளிவாக விளக்கப்பட்டிருப்பது போன்று, رَجْمٌ (ரஜம்) என்பதன் பொருள் கொல்லுதல் என்பதாகும். எனவே رَجِيْمٌ (ரஜீம்) என்பவன் வருங்காலத்தில் கொல்லப்படுகின்ற அந்த தஜ்ஜால் ஆவான். இது தனது அடியார்களைப் பாதுகாக்கின்ற அந்த இறைவனின் வாக்குறுதியாகும். மேலும் இறைவனின் கூற்றில் எந்த மாற்றமும் ஏற்படுவது சாத்தியம் இல்லை. எனவே இது رَحِيْمٌ (ரஹீம் - அளவற்ற அருளாளன்) எனும் இறைவனிடமிருந்து முஸ்லிம்களுக்கு நற்செய்தி ஆகும். மேலும் رَجِيْمٌ (ரஜீம்) என்ற சொல்லின் கருத்தாக இருப்பதைப் போன்று, (மஸீஹ் ஆகிய) அவர் தஜ்ஜாலை ஒரு நேரத்தில் கொலை செய்து விடுவார்.

## அரபு கவிதைகள்

وَمَعْنَى الرَّجْمِ فِیْ هٰذَا الْمُقَامِ كَمَا عُلِّمْتُ مِنْ رَبِّ الْاَنَامِ

படைக்கப்பட்டவர்களின் இறைவனிடமிருந்து எனக்கு ஞானம் வழங்கப்பட்டது போன்று, இந்த இடத்தில் (ரஜம் – விரட்டுதல்) என்பதன் பொருள், துன்பத்திற்குள்ளாக்குதல் என்பதாகும்.

هُوَالْاِعْضَالُ اِعْضَالُ اللِّئَامِ وَاِسْكَاتُ الْعِدَا كَهُفِ الظَّلَامِ

அதாவது, தரங்கெட்டவர்களை இயலாமையில் ஆழ்த்துவது. மேலும் இருள்களின் இருப்பிடமாக இருக்கும் பகைவர்களை வாய்மூடச் செய்வது என்பதாகும்.

وَضَرْبٌ يَخْتَلِیْ اَصْلَ الْخِصَامِ وَلَا نَعْنِیْ بِهِ ضَرْبَ الْحُسَامِ

சண்டையின் வேரை அறுத்து வைத்து விடுகின்ற அப்படிப்பட்ட அடி ஆகும். மேலும் அடி என்பதன் நமது கருத்து வாளின் தரப்படும் அடி என்பதல்ல.

تَرَی الْاِسْلَامَ كُسِّرَ كَالْعِظَامِ وَكَمْ مِنْ خَامِلٍ فَاقَ الْعِظَامِ

இஸ்லாம் எலும்புகளைப் போன்று உடைத்து வைத்து விடப்பட்டிருக்கிறது. மேலும் எத்தனையோ பெயர் அறியப்படாதவர்கள் மகத்தான அந்தஸ்தினால் உயர்ந்து விட்டனர் என்பதை நீர் காண்கிறீர்.

فَنَادَی الْوَقْتُ اَیَّامَ الْاِمَامِ لِتُنْجَی الْمُسْلِمُوْنَ مِنَ السِّهَامِ

எனவே முஸ்லிம்கள் அம்புகளிலிருந்து காப்பாற்றப்படு – வதற்காக காலம் ஓர் இமாமின் நாட்களைப் பற்றி குரல் கொடுத்திருக்கிறது.

فَلَا تَعْجَلْ وَفَكِّرْ فِی الْكَلَامِ اَلَيْسَ الْوَقْتُ وَقْتَ الْاِنْتِقَامِ

எனவே நீர் அவசரப்பட வேண்டாம். மேலும் (இந்தக்) கூற்று பற்றி சிந்திப்பீராக. இந்த நேரம் பழிவாங்குவதற்கான நேரம் அல்ல.

اَتٰی فَوْجَ الْمَلَآئِكَةِ الْكِرَامِ بِكَفِّ الْمُصْطَفٰی اَضْحَی الزِّمَامِ

நான் கண்ணியமிக்க வானவர்களின் படையைப் பார்க்கின்றேன்.★ (அவர்களின்) கடிவாளம் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கையில் கொடுக்கப்பட்டுள்ளது.

இப்போது எல்லா ஏமாற்று வேலைகளும் அழிந்து போகும் காலம் வந்து விட்டது. அதில் பொய்யும் இருளும் எஞ்சியிருக்காது. மேலும் இஸ்லாத்தைத் தவிர மற்றெல்லா மார்க்கங்களும் அழிந்து விடும். இதற்கு முன்னர் பூமி அநீதி, கொடுமை, இறைமறுப்பு, பொய் ஆகியவற்றால் நிரம்பி இருந்ததைப் போன்று, பூமி நீதி, நேர்மை, ஒளி ஆகியவற்றால் நிரப்பப்பட்டு விடும். எனவே அந்த நேரத்தில் அழிவிற்கான

★அடிக்குறிப்பு: முதல் பதிப்பில் اَتٰی (அதா) என்ற சொல் அச்சிடப்பட்டிருக்கிறது. பாரசிக மொழியாக்கத்தின்படி, اَرٰی (அரா) என்று இருக்க வேண்டும். அல்லது பின்னர் மொழியாக்கமும் மாற வேண்டும் - வெளியீட்டாளர்.

வாக்குறுதி முன்னரே வழங்கப்பட்டிருந்த அந்த தஜ்ஜாலின் கூட்டம் கொலை செய்யப்படும். கொலை என்று நாம் கூறுவதன் கருத்து, அவனுடைய ஆற்றலை முறிப்பது மற்றும் அவனிடம் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கின்றவர்களை விடுதலை செய்வது என்பது மட்டுமே ஆகும்.

சுருக்கமாக, எவனை شَيۡطَانِ الرَّجِيۡمِ (ஷைத்தானிர் ரஜீம் - விரட்டப்பட்ட ஷைத்தான்) என்று கூறப்பட்டதோ, அவனே சாபத்திற்குரிய தஜ்ஜாலும் பழமையான خَنَّاس (திரை மறைவிலிருந்து தாக்குபவனும்) ஆவான். மேலும் (தஜ்ஜால் ஆகிய) அவன் கொலை செய்யப்படுவது ஒரு வாக்களிக்கப்பட்ட விஷயமும் உறுமொழி வழங்கப்பட்ட குறிக்கோளும் ஆக இருந்தது. எந்த சமுதாயத்தைப் பற்றிய குறிப்பு இந்த ஏழு வசனங்களின் இறுதி வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அந்தக் காலத்தை, தஜ்ஜாலின் காலம் கடந்து சென்று விட முடியாது என்பது ஓதுபவரின் மனதில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அல்லாஹ் ஃபாத்திஹா மற்றும் بِسۡمِ اللّٰهِ (பிஸ்மில்லாஹ்) ஓதுவதற்கு முன்னர் رَجِيۡمٌ (ரஜீம்) அதாவது تَعَوُّذ (தஅவ்வுது) ஓதுவதை முழு இஸ்லாமிய மார்க்கத்தின் மீதும் கட்டாயமாக்கி விட்டான். மேற்கூறப்பட்ட رَجِيۡمٌ ரஜீம் (ஆகிய தஜ்ஜால்) இறுதி காலத்தில் கொல்லப்படுவான் என்பது தொன்று தொட்டே அல்லாஹ்வின் தக்தீர் (இறைநியதி)-ல் எழுதப்பட்டு விட்டது. மேலும் இந்தப் பாம்பு கடிப்பதிலிருந்து அடியார்கள் ஈடேற்றம் அடைந்து விடுவார்கள்.

எனவே இன்று காலம் தனது இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டது. மேலும் (சப்வு மஸானீ மீண்டும் மீண்டும் ஓதப்படுகின்ற ஏழு) என்பதைப் போன்று உலகின் வயதும் சூரிய கணக்கின்படியும், சந்திர கணக்கின்படியும் ஏழாவது ஆயிரம் வரை சென்றடைந்து விட்டது. இன்று விரட்டப்பட்ட ஷைத்தான் தனக்கு ஒரு நிழலான ஆடையைப் போன்று இருக்கின்ற ஒரு தோற்றத்தில் வெளிப்பட்டிருக்கிறான். மேலும் வழிகேடு இந்த சமுதாயத்துடன் முடிந்து விட்டது. அதைப் பற்றி சூரா ஃபாத்திஹாவின் கடைசி சொற்களில் வந்திருக்கிறது. இந்த நுணுக்கமான விஷயத்தை ஓர் ஒளிமிக்க இயல்பைக் கொண்டவரால் மட்டுமே புரிய முடியும்.

தஜ்ஜால் வானத்தின் ஆயுதத்தின் மூலமாக மட்டுமே கொல்லப்படுவான். அதாவது அல்லாஹ்வின் அருளால் கொல்லப்படுவான்; எந்த மனித ஆற்றலினாலும் அல்ல. எனவே எந்தச் சண்டையும், கொலையும் நடைபெறாது. ஆனால் இது ஓரிறைவனிடமிருந்து இறங்குகின்ற விஷயமாகும். மார்க்கத்தின் அடித்தளங்களை கீழே வீழ்த்துவதற்காகவும், அல்லாஹ்வின் மறை நூல்களை தூள் தூளாக்கி விடுவதற்காகவும், ஒவ்வொரு நூற்றாண்டிலும் நம்பிக்கை கொண்டவர்களை, ஓரிறைக் கொள்கை கொண்டவர்களை, நல்லவர்களை, உண்மையில் நிலைத்திருப்பவர்களை, உண்மையைத் தேடுபவர்களை வழிகெடுப்பதற்காகவும் இந்த தஜ்ஜால் தனது ஏதாவதொரு சந்ததியை அனுப்பிக் கொண்டு வந்திருக்கிறான். அந்த தஜ்ஜால் இறுதி காலத்தில் கொல்லப்படுவான் என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாக இருந்தது. குழப்பம் மற்றும் கிளர்ச்சி ஆகியவற்றின் மீது நன்மை வெற்றி பெறும். பூமி மாற்றப்பட்டு விடும். மேலும் ஏராளமான மக்கள் ரஹ்மான் ஆகிய இறைவனின் பக்கம் திரும்புவார்கள். பூமி தனது இறைவனின் ஒளியால் ஒளிமயமாகி விடும். உள்ளம் ஷைத்தானிய இருள்களிலிருந்து வெளியே வந்து விடும்.

இதுதான் பொய்யின் மரணம் ஆகும். தஜ்ஜாலின் மரணம் ஆகும். மேலும் அந்தப் பாம்பின் மரணம் ஆகும். தஜ்ஜால் ஒரு நபர் ஆவார். அவர் ஏதோ ஒரு காலத்தில் கொல்லப்படுவார் என்று மக்கள் கூறுகின்றனரா? அவ்வாறு ஒருபோதும் அன்று. மாறாக, அவன் எல்லாத் தீமைகளின் தந்தையாகிய ரஜீம் ஷைத்தான் (விரட்டப்பட்ட ஷைத்தான்) ஆவான். அவன் இறுதி காலத்தில் முட்டாள்தனங்களை நீக்குவதன் மூலமாகவும், மடமையான கூற்றுகளை வேரறுப்பதன் மூலமாகவும் கல்லெறிந்து கொல்லப்படுவான். இது அல்லாஹ்வின் கூற்றாகிய, اَلشَّيۡطَانِ الرَّجِيۡمِ (அஷ்ஷைத்தா-னிர் ரஜீம் - விரட்டப்பட்ட ஷைத்தான்) என்பதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது போன்று, இது ரஹீம் ஆகிய இறைவனிடமிருந்துள்ள வாக்குறுதியாகும். இந்த காலத்தில் நமது இறைவனின் விஷயம் உண்மையைப் பொருத்த அளவிலும், நீதியைப் பொருத்த அளவிலும் முழுமை பெற்றது. இஸ்லாத்தின் மீது துன்பங்களும், துயரங்களும் இறங்கிய பின்னர் அல்லாஹ் தனது கண்ணியமிக்க பார்வையை இட்டான். எனவே خَنَّاس (கன்னாஸ் - மறைந்திருந்து தாக்குபவன்) ஆகிய அவனைக் கொலை செய்வதற்காகவும், இந்தச் சண்டையை தீர்த்து வைப்பதற்காகவும் அல்லாஹ் தனது மஸீஹை இறக்கினான். மேலும் மறைவான செய்திகளின் முறைப்படியே ஷைத்தானுக்கு رَجِيۡمٌ (ரஜீம் - விரட்டப்பட்டவன்) என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், رَجۡمٌ (ரஜம்) என்பதன் பொருள், சந்தேகத்திற்கும், ஐயத்திற்கும் இடமின்றி கொலை செய்வது என்பதாகும். மேலும் கம்பீரமான அல்லாஹ்வின் மஸீஹ் இறங்கும் காலத்தில் அந்த தஜ்ஜாலை கொலை செய்வது தொடர்பாக தக்தீர் (இறைநியதி) நியமிக்கப்-பட்டிருந்தது. எனவே அல்லாஹ் வழிகேடு மற்றும் தவறான வழியின் காலத்தைப் பற்றி அஞ்சும் சமுதாயத்திற்கு ஆறுதலையும், நற்செய்தியையும் வழங்குவதற்காக இந்த சம்பவத்தைப் பற்றி முன்னரே தெரிவித்து விட்டான்.

(தொடரும்...)

நிச்சயமாக திருக்குர்ஆன் தனது வழிகாட்டல்களில் நான்கு ஞானங்களையும் ஒருங்கே கொண்டுள்ளது. அதாவது, (1) துவக்கத்தின் அறிவு, (2) திரும்புதலின் அறிவு, (3) நுபுவ்வத்தின் அறிவு, (4) இறைவனின் தவ்ஹீது மற்றும் அவனது பண்புகளைப் பற்றிய அறிவு. சந்தேகமின்றி, இந்த நான்கு ஞானங்களும் சூரா ஃபாத்திஹாவில் இருக்கின்றன. மேலும் உம்மத்தின் பெரும்பாலான இதயங்களில் உயிருடன் உள்ளீடு செய்யப்பட்டுள்ளன. அவர்கள் அதைப் படிக்கின்றார்கள்தான். ஆனால் அது அவர்களின் தொண்டைக்குக் கீழே இறங்குவதில்லை. அவர்கள் அதன் ஏழு ஆறுகளையும் வெட்டி ஓட விடுவதில்லை. மாறாக, அவர்கள் தீய நடத்தையுடையவர்களைப் போன்ற வாழ்க்கையை நடத்துகின்றனர்.




திருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் உண்மையை நிலைநாட்டக்கூடிய வாதங்கள்

பாகம் ஒன்று

மேலும் இந்த இடத்தில் வெளிப்படுத்தத் தகுந்த விஷயம் என்னவெனில், நாம் தற்போது விளக்கிக் கூறியிருக்கும் 'பல கூறுகளைக் கொண்ட சான்று' என்பதற்கு எவர்கள் தமது நூலிலிருந்து முன்மாதிரியைக் காட்ட விரும்புகின்றனரோ, அவர்களுக்கு 'பல கூறுகளை உள்ளடக்கியிருக்கும்' சான்று என்பது, அதன் ஒவ்வொரு பகுதியும், தானே ஒரு விஷயத்திற்கு சான்றாக இருப்பதற்குப் பகரமாக அந்த அனைத்து பகுதியைக் கொண்ட சான்றுகளுக்கும் குறைந்தபட்சம் ஒரு முன்மாதிரியை எடுத்து வைக்க வேண்டியது கடமையாகும்.

இந்த நிபந்தனையைப் புரிந்து கொள்வதற்கு உதாரணம் தேவையுடையதாக இருக்கிறது. எனவே நாம் இந்த இடத்தில் 'நிரூபிக்கக் கூடிய பல கூறுகளை உள்ளடக்கிய சான்றுகள்' என்பதிலிருந்து ஒரு சான்றை (குர்ஆன் ஆகிய) ஃபுர்கான் மஜீதிலிருந்து எழுதுகின்றோம். அது, (குர்ஆன் ஆகிய) ஃபுர்கான் மஜீதின் அடிப்படையான போதனை, ஞானத்தைக் கொண்ட சான்றுகளை அடிப்படையாகவும் உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது என்பதாகும். அதாவது (குர்ஆன் ஆகிய) ஃபுர்கான் மஜீது ஈடேற்றத்திற்கு அடிப்படையாக இருக்கக் கூடிய ஒவ்வொரு நம்பிக்கையின் கோட்பாட்டையும் ஆய்வுப்பூர்வமான முறையில் நிரூபிக்கிறது. அது உறுதியான, வலுவான தத்துவ அளவிலான சான்றுகள் மூலமாக அதன் உண்மையின் நிலை வரை கொண்டு செல்கிறது.

எடுத்துக்காட்டாக, உலகத்தைப் படைத்தவனின் இருப்பை நிரூபித்துக் காட்டுவது, (ஓரிறைக் கொள்கை எனும்) தவ்ஹீதை சான்றுகளுடன் உறுதிப்படுத்துவது, இல்ஹாமின் தேவை என்பது தொடர்பாக உறுதியான சான்றுகளை எழுதுவது, உண்மையை உண்மை என்றும், பொய்யை பொய் என்றும் நிரூபித்துக் காட்டுவதில் ஒருபோதும் குறை வைக்காமல் இருப்பது ஆகியவை.

எனவே இந்த விஷயம் (குர்ஆன் ஆகிய) ஃபுர்கான் மஜீத் அல்லாஹ்விடமிருந்துள்ளது என்பதற்கு பெரிய, மகத்தான ஆதாரம் ஆகும். அதனால் அது தனது முழுமைத்தன்மையைக் கொண்டிருப்பதன் காரணமாக அதன் உண்மைத்துவமும், சிறப்புத்தன்மையும் நிரூபணமாகிறது. ஏனெனில் உலகின் எல்லா அபத்தமான கொள்கைகளையும் எல்லா வகையான, எல்லா விதமான தவறுகளிலிருந்து தெளிவான சான்றுகள் மூலமாக தூய்மையாக்குவது, மக்களின் உள்ளங்களில் நுழைந்து விட்ட எல்லா வகையான சந்தேகங்களையும், ஐயங்களையும் வலுவான ஆதாரங்களின் மூலமாக அழித்து விடுவது, தனது நூலில் நிரூபிக்கப்பட்டதும், ஆய்வு செய்யப்பட்டதும், அதற்கு முன்பு, எந்த இல்ஹாமிய நூலிலும் இல்லாததாகவும், எந்தக் காலத்திலும் எந்தத் தத்துவ ஞானியும், சிந்தனையாளரும் தனது கண்ணோட்டம், சிந்தனை, அறிவு, அனுமானம், புரிதல், உணர்திறன்

ஆகியவற்றின் வலிமையால் அந்தத் தொகுப்பின் உண்மையான மெய்மையைக் கண்டறிய முடியாத –தாகவும் இருந்த அத்தகைய தொகுப்பைக் குறிப்பிடுவது ஆகியவற்றை அது தனது மறைநூலில் குறிப்பிடுகிறது.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதாவது, ஒருநாள், அரை நாளைக்காவது, ஏதேனும் பள்ளிக் கூட்டத்தில் கல்வி கற்பதற்காக அமர்ந்திருந்தார்கள் என்றோ அல்லது எவரிடமிருந்தாவது அறிவுப்பூர்வமான அல்லது ஆதாரப்பூர்வமான அறிவை எப்போதாவது கற்றிருந்தார்கள் என்றோ அல்லது அன்னாருக்கு தத்துவஞானியுடனோ, தர்க்க அறிவாற்றல் உள்ளவருடனோ தொடர்பு இருந்து வந்தது என்றோ அதன் தாக்கத்தினால்தான் (நபி ஸல்) அவர்கள் உண்மைத்தன்மை கொண்ட ஒவ்வொரு கோட்பாட்டிற்கும் தத்துவ ரீதியிலான சான்றுகளை நிலைநாட்டி, ஈடேற்றத்திற்கான அனைத்துக் கோட்பாடுகளின் உண்மைத்தன்மையைத் தெளிவுபடுத்தினார்கள் என்பதற்கு ஒரு சிறு சான்றைக் கூட எவரும் முன்வைக்க இயலவில்லை. இது எத்தகைய மகத்தான சாதனை என்றால், அது இறைவனின் உதவி மற்றும் இறைவெளிப்பாடு –களின் மூலமேயன்றி ஒரு சாத்தியம் இல்லாத பணி ஆகும்.

எனவே திருக்குர்ஆன் என்பது ஒருவனும், இணை இல்லாதவனும், எந்தவொரு மனிதனின் அறிவும் அவனுடைய அறிவுக்கு சமமாக இல்லாதவனுமாகிய அந்த இறைவனின் கூற்று ஆகும் என்பதை அறிவு தீர்க்கமான முறையில் மனிதனைக்கட்டாயமாக்குகிறது. இந்தச் சான்றை நாம் ‘பல கூறுகளைக் கொண்ட சான்றுகள்’ என்பதிலிருந்து முன்மாதிரியாக எடுத்து எழுதி இருக்கிறோம்.

அதன் ஒட்டு மொத்தமான பகுதிகள் அனைத்துப் பகுதிகளையும் ஒன்று சேர்த்திருகின்றன என்றால், அவை அனைத்துமே சான்றுகளாகவே இருக்கின்றன. அதன்படி, இந்தச் சான்றின் பகுதிகள் அனைத்தும் உண்மையான கொள்கைகளில் நிலைநாட்டப்பட்டிருக்கும் சான்றுகளே ஆகும். மேலும் இந்தச் சான்றும் சான்றுகளின் வகைகளில் ஒரு வகையாகும். எனவே விவாதத்தில் எல்லா வகையான சான்றுகளையும் எடுத்து வைப்பது கடமையாக இருப்பது போன்று, இந்தச் சான்றை எடுத்து வைப்பதும் கடமை ஆகும். ஆனால் இந்தச் சான்றைக் காட்டுவதற்கு எவற்றால் அவை உருவாக்கப்பட்டிருக்கின்றனவோ, கட்டமைக்கப் –பட்டிருக்கின்றனவோ அந்த அனைத்து சான்று –களைக் காட்டுவதும் அவசியமாகும். அவற்றின் ஒருங்கிணைந்த அமைப்பிலிருந்தே அதன் இருப்பு ஆயத்தமாகிறது. எடுத்துக்காட்டாக, படைத்தவனின் இருப்பை நிரூபிக்கும் சான்று, ஓரிறை கொள்கை இருப்பதை நிரூபிக்கும் சான்று. அல்லாஹ் படைப்பாளி என்பதை நிரூபிக்கும் சான்று போன்றவை. ஏனெனில் இவையே சான்றின் பகுதிகளாக இருக்கின்றன. மேலும் ஒரு முழுமையான பொருளின் இருப்பு என்பது, அதன் பகுதிகள் இல்லாமல் சாத்தியமில்லை. எந்தவொரு பொருளின் தன்மையும் அதன் பகுதிகள் இல்லாமல் கிடைக்கவும் முடியாது.

எனவே இந்த எல்லாப் பகுதிகளுக்கான சான்றுகளையும் எடுத்து வைப்பது விவாதிப்பவருக்கு கட்டாயமானதாகும். ஆயினும் நாம் ஒரு கொள்கையை நிரூபிப்பதற்கு ஐந்து சான்றுகளை எழுதியிருப்பது போன்று, விவாதிப்பவர் அதனை நிரூபிப்பதில் அல்லது அதனை பொய்யாக்கிக் காட்டுவதில் – அதாவது கருத்தும், கொள்கையும் இருப்பது போன்று, இந்தப் பிரசுரத்தில் நாம் (முன்பே) குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகளையும் வரையறைகளையும் கடைபிடித்தவாறு, விவாதம் செய்பவரும் தமது இல்ஹாமிய வேதத்திலிருந்து ஒரேயொரு சான்றை மட்டும் எடுத்துக் காட்ட வேண்டும்.

வெளியிடுபவன்
எளியவன்
மிர்ஸா குலாம் அஹ்மது
காதியான், குர்தாஸ்பூர் மாவட்டம்
பஞ்சாப்

(தொடரும்...)

# எல்லாரிடமும் அன்பு எவரிடமும் இல்லை வெறுப்பு

கியானி முபஷ்ஷிர் அஹ்மத் காதிம்

தமிழாக்கம்: மவ்லவி அபுல் ஹஸன் ஆபித்

اٰمَنَ الرَّسُوۡلُ بِمَاۤ اُنۡزِلَ اِلَيۡهِ مِنۡ رَّبِّهٖ وَالۡمُؤۡمِنُوۡنَ ؕ كُلٌّ اٰمَنَ بِاللّٰهِ وَمَلٰٓـئِكَتِهٖ وَكُتُبِهٖ وَرُسُلِهٖ ۚ لَا نُفَرِّقُ بَيۡنَ اَحَدٍ مِّنۡ رُّسُلِهٖ ۚ وَقَالُوۡا سَمِعۡنَا وَاَطَعۡنَا ٭ غُفۡرَانَكَ رَبَّنَا وَاِلَيۡكَ الۡمَصِيۡرُ

தூதர் தம்முடைய இறைவனிடமிருந்து தமக்கு இறக்கப்பட்டதில் நம்பிக்கை கொண்டுள்ளார். (ஏனைய) நம்பிக்கையாளர்களும் (நம்பிக்கை கொண்டுள்ளனர்). இவர்களெல்லாரும் அல்லாஹ், அவனுடைய வானவர்கள், அவனது வேதங்கள் மற்றும் அவனுடைய தூதர்கள் மீதும் நம்பிக்கைக் கொண்டு, நாங்கள் அவனுடைய தூதர்களுள் எவருக்கிடையிலும் (எந்த) வேற்றுமை(யும்) பாராட்டுவதில்லை (எனக் கூறுகின்றனர்). மேலும் நாங்கள் அல்லாஹ்வின் கட்டளையை) செவியேற்றோம் கட்டுப்பட்டோம். எங்கள் இறைவா! நாங்கள் உன் மன்னிப்பைக் கோருகின்றோம். உன்னிடமே (நாங்கள்) திரும்பி வர வேண்டியதுமிருக்கிறது என்றும் இவர்கள் கூறுகின்றனர். (அல் பகரா 2:286)

وَمَاۤ اَرۡسَلۡنٰكَ اِلَّا رَحۡمَةً لِّلۡعٰلَمِيۡنَ

நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பினோம். (அல் அ(ன்)ம்பியா 21:108)

அன்பு என்பது எப்படிப்பட்ட இயல்பான உணர்வு என்றால் எல்லாம் வல்ல அல்லாஹ் அந்த உணர்வை அனைத்து உயிரினங்களுக்கும் ஆரம்பத்தில் இருந்தே வைத்துள்ளான். அதனால் மேலோட்டமாக இவ்விஷயத்தை ஆராயும்போது அதிக புரியும் திறன் இல்லாத மிருகங்கள் மற்றும் பறவைகள் ஒன்று மற்றொன்றிடம் எப்படிப்பட்ட அன்பை மேற்கொள்கின்றது என்றால் யாராவது அவர்கள் பக்கம் பார்வை செலுத்தினால் அவர்களுடன் சண்டையிட்டு மரணிப்பதற்கு ஆயத்தம் ஆகி விடுகின்றது.

இது ஆரம்பத்திலிருந்தே இருந்து வரும் ஒரு இயல்பான உணர்வாகும், இறுதி வரை தொடரும். இந்த அன்பு மற்றும் நேசத்தின் உணர்வில் பகுத்தறிவும் ஞானமும் நுழையும்போது, அது மிகவும் அழகாகவும் பிரகாசமாகவும் தோன்றுகிறது. இறைவனின் படைப்பை நேசித்த பிறகு, அதன் கடைசி மூச்சு படைப்பினங்களின் படைப்பாளரான இறைவனிடம் போய் சேரும். அப்போது ஓர் அறிவாற்றல், புரிதல் மற்றும் திறன்களைக் கொண்ட மனிதனுக்கு அவன் பிரபஞ்சத்தின் எப்படிப்பட்ட படைப்பாளன் என்பதையும், அவன் தனது படைப்பினங்களை இவ்வளவு சரியான முறையிலும் ஞானத்துடனும் படைத்துள்ளான். மேலும் அன்பு மற்றும் நேசத்தின் தூய உணர்வை அவனுக்குள் வைத்துள்ளான். இத்தகு பிரபஞ்சத்தையே உருவாக்கிய அந்த படைப்பாளனும் எஜமானனும் தான் உண்மையான நேசம் கொள்வதற்கு தகுதியானவன் என்பதையும் அவன் உணர்கின்றான்.

இந்த இயல்பான நேசம் மற்றும் அன்பின் உணர்வுகளை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது ஓர் உருது கவிதையில் இவ்வாறு கூறுகிறார்கள்:

தூனே குத் ரூஹோ(ன்) பே அப்னே ஹாத் ஸே சிட்கா
நமக் உஸ் ஸே ஹே ஷோர் முஹப்பத் ஆஷிகானே ஸார் கா

பொருள்: அல்லாஹ்வே! இந்த ஆன்மாக்களில் நீயே சுயமாக அன்பு மற்றும் நேசத்தின் தூய உணர்வை உருவாக்கினாய். இதன் காரணமாக காதலர்களிடையே நேசம் மற்றும் அன்பினுடைய ஒரு கூச்சல் எழுந்துள்ளது. எனவே, வெறுப்பும் தப்பெண்ணமும் இயல்பான உணர்வுகள் அல்ல என்பது அனைவரின் மீதும் முற்றிலும் தெளிவாகிறது. வெறுப்பு என்பது அன்பு மற்றும் வெறுப்பு என்பது அன்பு மற்றும் நேசத்தின் தூய திரையில் தோன்றும் தூசியாகும். தூய திரையில் தோன்றும் தூசியானது எவ்வாறு ஒளியின் வடிவத்தைப் பெறுகிறதோ அவ்வாறே வெறுப்பும் இருக்கிறது. மேலும் ஜன்னல்களை மூடுவதற்குப் பெயர் இருளாகும். திருக்குர்ஆன் உலகிற்கு கூறுகின்ற அன்பு மற்றும் நேசத்தின் மிகச் சிறந்த மற்றும் மிகவும் பயனுள்ள தத்துவம் இதுதான். அதை இன்றைய காலகட்டத்தில், அஹ்மதிய்யா முஸ்லிம்



ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நமக்கு விளக்கியுள்ளார்கள்.

அதன் சுருக்கத்தைக் கூறுகின்றேன்: அல்லாஹ்விட-மிருந்து உலகிற்கு வந்த அனைத்து நபிமார்களின் உண்மையான நோக்கம், மனிதர்களின் உள்ளங்களில் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மீது உண்மையான அன்பை உருவாக்குவதே ஆகும். அத்துடன் அனைத்து மனிதர்கள் மற்றும் சகோதரர்களின் உரிமைகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும், அவர்கள் மீது அன்பு மற்றும் கருனை காட்டுவது தொடர்பாகவும் அவர்களுக்கு விளக்குவதும் ஆகும். இவை அனைத்தும் எல்லா மனிதர்களிடமும் ஏற்படாத வரை, மற்ற எல்லா வேலைகளும் வெறும் வெளிப்படையாக மற்றவர்களுக்கு காட்டுவதற்காகவும் சடங்கு சம்பிரதாய-மாகவுமே இருக்கும். (மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 67)

எனவே, 'இன்ஸான்' என்ற சொல் பாரசீக வார்த்தையான 'உன்ஸான்' என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் இரண்டு நேசங்கள் என்பதாகும். ஒன்று மனிதன் தன்னைப் படைத்துக் காத்து பரிபாலிக்கின்ற இறைவன் மீது வைத்திருக்கும் அன்பு. இரண்டாவது மனிதனுக்கு மனிதனுடன் ஏற்படக்கூடிய அன்பு. இந்த இரண்டு அன்புகளும் ஒரு மனிதனிடம் ஒன்றிணையாத வரை, அவனை மனிதன் என்று அழைக்க முடியாது. ஒருவன் உண்மையான மனிதன் என்று அழைக்கப்படுவதற்கு, இந்த இரண்டு அன்புகளும் இருப்பது மிகவும் முக்கியமாகும். அதாவது மனிதன் தன்னைப் படைத்துக் காத்து பரிபாலிக்கின்ற இறைவன் மீது வைத்திருக்கும் அன்பு, மற்றும் மனிதனுக்கு மனிதனுடன் ஏற்படக்கூடிய அன்பு. அப்போதுதான் அவனை உண்மையான மனிதன் என்று அழைக்க முடியும்.

இது தொடர்பாக அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானீ அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மல்ஃபூஸாத், தொகுதி 5 பக்கம் 69 -ல் கூறியதன் சுருக்கம்:

"உங்களுக்கு எனது அறிவுரை என்னவென்றால், இரண்டு விஷயங்களை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள்: ஒன்று உங்களைப் படைத்துக் காத்து பரிபாலிக்கின்ற இறைவனை நேசிப்பதும், அவனுக்கு அஞ்சுவதும் ஆகும். மற்றொன்று நீங்கள் எவ்வாறு உங்கள் மீது கருணை காட்டுவீர்களோ உங்களை நேசிப்பீர்களோ அதே போன்று உங்கள் சகோதரர்களையும் நேசிக்க வேண்டும். உங்கள் சகோதரர்களில் எவராவது தவறு அல்லது குற்றம் புரிந்து விட்டால் நீங்கள் அவர்களை மன்னிக்க வேண்டும். மன்னிப்பவர்களை இறைவன் விரும்புகின்றான்."

மற்றொரு சந்தர்ப்பத்தில் இது தொடர்பாக அன்னார் இவ்வாறு கூறுகிறார்கள்:

இறையடியார்களுடன் அன்பு செலுத்துங்கள். மேலும் அவர்கள் மீது கருணை காட்டுங்கள். மேலும் நாவாலோ கைகளாலோ வேறு எவ்வகையாலோ அவர்கள் மீது அநியாயம் செய்யாதீர்கள். அவனது படைப்பினங்களின் நலனுக்காக முயற்சி செய்து கொண்டே இருங்கள். உங்களின் கீழ் இருக்கக் கூடியவராக இருந்தாலும் அவர் மீது கர்வம் காட்டாதீர்கள். ஒருவர் உங்களை ஏசினாலும் நீங்கள் எவரையும் ஏசாதீர்கள். இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் பொருட்டு நீங்கள் எளிமை, சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் ஆகியவற்றை கைக்கொண்டு படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். பெரியோர்களாக இருந்து சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாகக் கருதாதீர்கள். நீங்கள் அறிவாளியாக இருந்து அறிவீனர்களுக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையால் அவர்களை அவமானப்படுத்தாதீர்கள். நீங்கள் செல்வந்தர்-களாக இருந்து ஏழை எளியவர்களுக்கு உதவி புரியுங்கள். தன்னலத்தால் அவர்கள் மீது அகங்காரம் கொள்ளாதீர்கள். எனவே நான் உங்களுக்கு இறைவனின் படைப்பினங்களோடு அன்பு செலுத்துமாறும் அவர்களுக்கு தொண்டு செய்யுமாறும் அறிவுரை கூறுகிறேன். (நூஹ் நபியின் கப்பல், பக்கம் 24,25)



இஸ்லாம் எப்படிப்பட்ட ஒரு மார்க்கம் என்றால் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அன்பு நேசம் மற்றும் கண்ணியத்திற்கான போதனையை வழங்கியுள்ளது. மேலும் உலகிற்கு எப்படிப்பட்ட பொன்னான வழிகாட்டலை வழங்கியுள்ளது என்றால் அதை நடைமுறைப்படுத்தினால் உலகில் அனைத்து குழப்பங்களும் சண்டை சச்சரவுகளும் முடிவு பெற்று விடும். இஸ்லாம், மார்க்க அமைதி சமாதானம் மற்றும் கண்ணியத்தைப் பேணுகின்றது என்பதற்கு இதை விட வேறு என்ன ஆத்தாட்சி இருக்க முடியும். அதாவது கண்ணியத்திற்குரிய இந்த மார்க்கத்திற்கான பெயரே இஸ்லாமாகும். அதன் பொருள் அமைதி மற்றும் நல்லிணக்கத்-திற்கான வழி என்பதாகும். இதனை ஏற்றுக் கொண்டு பின்பற்றுவர்களை முஸ்லிம் என்று கூறுவார்கள். அதாவது அமைதி மற்றும் சமாதானத்தின் வழியில் நடப்பவர்கள் மேலும் முஸ்லிம்கள் தமக்குள் ஒருவர் மற்றவரை சந்திக்கும்போது அஸ்ஸலாமு அலைக்கும் என்ற அன்பளிப்பை பரிமாறிக் கொள்கின்றனர். இதன் பொருள் உங்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக இஸ்லாம் எந்த இறைவனை உலகிற்கு முன்னால் அறிமுகப்படுத்துகின்றதோ அந்த இறைவனின் ஒரு பண்பு அஸ்ஸலாம் ஆகும் அமைதியை விரும்பக் கூடியவன் மாறாக எதுவரை என்றால் எந்த இடத்தில் இந்த தூய மற்றும் கண்ணியத்திற்குரிய வேதமான திருக்குர்ஆன் இறங்கியதோ அந்த இடத்திற்கு பெயரும் பலதுல் அமீன் அதாவது அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான நகரம் என்பதாகும். மேலும்

எந்த தூய மலக்குமார்கள் இந்த வேதத்தை கொண்டு இறங்கினார்களோ அந்த மலக்குமார்களின் பெயரும் ரூஹுல் அமீன் அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான தூதுவர் என்பதாகும். இந்த மதிப்பிற்கும் கண்ணியத்திற்கும் உரிய இஸ்லாம் மார்க்கத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம்களிடத்தில் மட்டுமல்ல. மாறாக இஸ்லாத்தின் மிகக் கொடிய எதிரிகளிடமிருந்தும் 'அமீன்' என்ற பட்டத்தை பெற்றுள்ளார்கள். எனவே இஸ்லாம் அமைதி, நல்லிணக்கம், நேசம், அன்பு மற்றும் கண்ணியத்திற்குரிய மார்க்கமாகும்.

தற்போது இந்த அமைதிக்கான தூதுவர் முஹம்மத் முஸ்த.்.பா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் போதனைகளின் சுருக்கத்தை அன்னாரின் அருளுக்குரிய சொற்களிலேயே நான் எடுத்து வைக்கின்றேன். அன்னார் (ஸல்) கூறுகிறார்கள்:

மக்களே! நன்றாக காது கொடுத்துக் கேளுங்கள். உங்கள் இறைவன் ஒருவனே. உங்களை படைத்தவனும் ஒருவனே. உங்கள் தந்தையும் ஒருவனே. மீண்டும் ஒரு முறை நன்றாக காது கொடுத்து கேளுங்கள். ஓர் அரேபியருக்கு அரபி அல்லாதவரை விடவோ, ஓர் அரபி அல்லாதவருக்கு அரேபியரை விடவோ, ஒரு வெள்ளையருக்கு கருப்பரை விடவோ, ஒரு கருப்பருக்கு வெள்ளையரை விடவோ எவ்விதச் சிறப்பும் மேன்மையும் இல்லை. ஒரு தனிப்பட்ட சிறப்புப் பண்புகளின் மூலம் மட்டுமே ஒரு மனிதன் மற்ற மனிதனை விட முன்னேற்றம் காணலாம். ஆனால் எவர் இறையச்சத்தை மேற்கொள்வாரோ அவரே இறைவனுடைய பார்வையில் மிகவும் அன்பிற்குரியவராவார். (முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல்)

எனவே இஸ்லாம் மார்க்கத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முழு உலகிற்கும் போதனையை வழங்கியவாறு கூறுகின்றார்கள் 'அல் கல்கு அயாலுல்லாஹ்' அனைத்து படைப்பினங்களும் அல்லாஹ்வின் குடும்பம் ஆகும். மேலும் எவர் அந்த குடும்பத்தைச் சார்ந்த மக்களிடம் நல்ல முறையிலும் அன்பான முறையிலும் நேசத்துடனும் நடந்து கொள்வாரோ அவரே அந்த இறைவனின் பார்வையில் மிகவும் சிறந்த மனிதர் ஆவார். பிரபஞ்சத்தின் படைப்பாளனாகிய இறைவன் எவ்வாறு தன்னை ரப்புல் ஆலமீன் அனைத்து உலகங்களுக்கும் இறைவன் என்று கூறியுள்ளனோ அதே போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இந்த உலகிற்காக மட்டும் அல்ல. மாறாக எண்ணற்ற உலகங்கள் தொடர்பான செய்தியை வழங்கியவாறு ரஹ்மத்துல் லில் ஆலமீன் அனைத்து உலகங்களுக்கும் கருணையாளர் என்று அழைத்துள்ளான். இப்போது உலகம் முதன்முறையாக நம்முடைய படைப்பாளன் இந்தியாவிற்கு மட்டுமே அல்லது அரபு நாட்டிற்கு மட்டுமே இறைவன் அல்ல. மேலும் முழு உலகிற்கு மட்டுமே இறைவன் அல்ல. மாறாக எண்ணற்ற உலகங்களின் இறைவன் ஆவான். இவ்வுலகம் அல்லாமல் வேறு சில உலகங்களும் இருக்கின்றன. அவை அனைத்திற்கும் ஒரே ஒரு இறைவன் தான் என்ற இந்த ஓசையை உலகம் கேட்டது. மேலும் உலகில் தோன்றக்கூடிய கண்ணியத்திற்குரிய மற்றும் மரியாதைக்குரிய நபி இந்தியாவிற்கு மட்டுமோ அல்லது




மத்திய கிழக்கு நாட்டிற்கு மட்டுமோ அல்ல. மாறாக முழு உலகிற்கும் ஓர் அருளாளராக இருக்கின்றார். மேலும் இஸ்லாமிய போதனைகளிலிருந்து அன்பு, சகோதரத்துவ உணர்வானது எப்படிப்பட்ட ஓர் உணர்வு என்றால் அது எந்த சமுதாயத்துடனோ நாட்டுடனோ மண்டலத்துடனோ ஜாதியுடனோ இனத்துடனோ தொடர்புடையது அல்ல. மாறாக இந்த உணர்வானது தனக்குள் உலகளாவிய ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமையின் சமநிலையை மேற்கொண்டுள்ளது என்பதை நிரூபித்து விட்டது. இதனால்தான் திருக்குர்ஆனில் கூலூ லின்னாஸி ஹுஸ்னா என்ற போதனை வழங்கப் -பட்டுள்ளது. அதாவது எந்த ஒரு பாகுபாடும் இன்றி அனைத்து மனிதகுலத்திடமும் நல்ல விஷயத்தை கூறுங்கள். மேலும் ஒவ்வொருவரையும் நேசியுங்கள். எனவே திருக்குர்ஆனில் எல்லாம் வல்ல அல்லாஹ்வினுடைய இந்த கூற்று பதிவு செய்யப்பட்டுள்ளது. அதை நான் என்னுடைய உரையின் ஆரம்பத்தில் கூறியுள்ளேன். அது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே! நாம் உம்மை அனைத்து உலகங்களுக்கும் ஓர் அருளாகவே அனுப்பியுள்ளோம் என்பதாகும்.

அதாவது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எந்த ஒரு வேறுபாடும் இல்லாமல் மார்க்க சமுதாய மற்றும் நாட்டின் அனைத்து மக்களுடன் அளவு கடந்த நேசம் கொள்கிறார்கள். இதனால் அன்னார் அருளாகத் திகழ்கிறார்கள். ஆண்கள், பெண்கள், பெரியவர்கள் சிறியவர்களுக்காக அன்னார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஒரு ரஹ்மத் ஆவார்கள். குழந்தை -களுக்காகவும் அடிமைகளுக்காகவும் ஏழைகளுக்காகவும் நசுக்கப்பட்டவர்களுக்காகவும் பலவீனமானவர்களுக்காகவும் அன்னார் ரஹ்மத் ஆவார்கள். விலங்குகளுக்காகவும் பறவைகளுக்காகவும் அன்னார் அருளாக இருக்கின்றார்கள். அனைத்து உலகங்களுக்காகவும் அன்னார் அருளாக இருக்கின்றார்கள். ஏழை மற்றும் ஆதரவற்றவர்களுடன் மிக்க நேசம் கொண்டவர்களாகவும் எந்நேரமும் அவர்களுக்கு தொண்டு செய்வதற்கு ஆயத்தமாகவும் இருந்தார்கள்.

ஒருமுறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது பொதி மூட்டையை சுமந்து கொண்டு சென்றிருந்த ஓர் ஏழை மூதாட்டியை சந்தித்தார்கள். அன்னார் அந்த மூதாட்டியிடமிருந்து அந்த மூட்டையை வாங்கிக் கொண்டு அவளின் இருப்பிடம் வரை சென்று விடுவதற்காக அவளுடன்

நடந்து சென்றார்கள். அன்னாரின் இந்த உயர்ந்த நல்லொழுக்கத்தைப் பார்த்து மூதாட்டி மிகவும் தாக்கத்திற்குள்ளானாள். மேலும் இவ்வாறு கூறினாள். நீங்கள் மிகவும் மென்மையான உள்ளம் கொண்டவர். மேலும் உயரிய நற்பண்புகளைக் கொண்ட மனிதராவீர். நான் உங்களுக்கு எதுவும் கொடுக்க முடியாது. ஆனால் ஒரு விஷயத்தை கூறுகின்றேன். நம்முடைய நகரத்தில் ஒரு மிகப்பெரிய மந்திரவாதி இருக்கின்றார் என்று நான் கேள்விப்பட்டேன். அவருடைய பெயர் முஹம்மது ஆகும். தாங்கள் அந்த மந்திரவாதியிடம் இருந்து விலகி இருக்கவும். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்விஷயத்தைக் கேட்டு சிரித்தார்கள். மேலும் மூதாட்டியிடம் அந்த மந்திரவாதி நான் தான் என்று கூறினார்கள். இதைக் கேட்ட அந்த மூதாட்டி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருளுக்குரிய முகத்தை அன்புடன் பார்த்தவாறு ஆழ்ந்த உணர்வுடன் இவ்வாறு கூறினாள். அந்த மந்திரவாதி நீங்கள்தான் என்றால் இறைவன் மீது ஆணையாக! உங்களுடைய மந்திரம் என்னையும் மயக்கி விட்டது. இன்றிலிருந்து நான் முஸ்லிமாக ஆகின்றேன் என்று கூறினாள்.

இதன் காரணமாகத்தான் இஸ்லாம் மார்க்கத்தின் தோற்றுநர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தூய வாழ்க்கையை யாரெல்லாம் நீதியின் கண் கொண்டு ஆய்வு செய்வார்களோ அவர்கள் அன்னார் படைப்பினங்களுடன் செலுத்திய அன்பு இரக்கம் மற்றும் அன்னாரின் உயரிய நற்பண்புகளில் இருந்து தாக்கம் அடையாமல் இருக்கவே முடியாது.

எனவே ஐரோப்பாவின் ஒரு புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் மிஸ்டர் ஆர்தர் தன்னுடைய History of Islam என்ற புத்தகத்தில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புகழ்ந்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார். முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உயரிய நற்பண்புகள் மற்றும் மேலான அந்தஸ்தை உடையவராக இருந்தார்கள். அன்னார் அனைத்து படைப்பினங்களுடனும் அன்புடனும் நேசத்துடனும் நடந்து கொண்டார்கள். அன்னாரின் நற்பண்புகள் மிகவும் சிறந்ததாக இருந்தது. அன்னாரின் நற்குணங்கள் பணிவு தன்னடக்கம் மனிதநேயம் கருணை உள்ளம் ஆகியவை போற்றப்படக்கூடியதாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மிகுந்த தூய உள்ளம் கொண்ட, கருணை உள்ளம் கொண்ட, இரக்க மனம் உடைய ஒரு கண்ணியத்திற்குரிய மற்றும் மதிப்பிற்குரிய உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட நபி மற்றும் தூதர் ஆவார்கள்.

இஸ்லாம் மார்க்கத்தின் இந்த போதனைகளுக்கேற்ப அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் மூன்றாவது கலீ.்.பா ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மத் ஸாஹிப் கலீ.்.பத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்கள் 1982-ல் ஸ்பெய்னில் மஸ்ஜித் பஷாரத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் உலகிற்கு “எல்லாரிடமும் அன்பு. எவரிடமும் இல்லை வெறுப்பு” என்ற இந்த முழக்கத்தை வழங்கினார்கள்:

இதே போன்று அன்னார் (ரஹி) பிரிட்டனின் ஆண்டு மாநாட்டில் தம்முடைய உரையில் இவ்வாறு கூறினார்கள்: “நான் என்னுடைய வாழ்நாளில் பலமுறை திருக்குர்ஆனை மிகவும் ஆழ்ந்து படித்துள்ளேன். எனக்கு அதில் ஒரு வசனம் கூட உலக விவகாரத்தில் எந்த ஒரு முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் இடையிலும் வேறுபாட்டை ஏற்படுத்துகின்ற போதனை அதில் இல்லை. அதேபோன்று ஹஸ்ரத் முஹம்மது முஸ்த.்.பா (ஸல்) அவர்கள் மற்றும் அன்னாரைப் பின்பற்றக் கூடியவர்கள் அன்பு, நேசம் மற்றும் இரக்கத்துடன் தான் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டார்கள். நாமும் மக்களின் உள்ளங்களை வெற்றி கொள்ள வேண்டும் என்றால் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சஹாபிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும்.

அன்னார் (ரஹி) கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் போதனைகளின் சுருக்கம் மற்றும் சாராம்சம் LOVE FOR ALL HATRED FOR NONE எல்லாரிடத்திலும் அன்பு எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்பதே ஆகும். (யு.கே ஆண்டு மாநாட்டு உரை அக்டோபர் 1980)

இன்று இந்த முழக்கம் உலகம் முழுவதும் பிரபல்யமான அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முழக்கமாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும் முழு உலகமும் இந்த முழக்கத்தை மிகுந்து பாராட்டுகின்றது.

President of Albania Culture Committee ரஸீம் ஹஸ்நாஜ் யு.கே ஆண்டு மாநாட்டில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய ஆன்மீக கலீ.்.பா ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் உரைகளைக் கேட்டார்கள். மேலும் மாநாட்டின் அமைப்பு ரீதியான பணிகளையும் மிகவும் அருகில் இருந்து பார்த்தார்கள். அவர்கள் தம்முடைய கருத்துகளை வெளிப்படுத்தியவாறு கூறுகிறார்கள்:




அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அழகான மற்றும் அமைதியான போதனைகளை உலகில் பரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் போற்றப்படத்தக்க பணிகளை பாராட்டியே ஆக வேண்டும், மேலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் எல்லாரிடத்திலும் அன்பு எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்கின்ற இந்த போதனை சமூகத்தில் அமைதி மற்றும் சமத்துவத்தை உருவாக்குவதற்கான மிகவும் சக்திவாய்ந்த குறிக்கோளை வழங்குகிறது. (அல் .்.பஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிக்கை நவம்பர் 7, 2008 பக்கம் 11)

(தொடரும்...)








*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

அன்னார் ஓர் உதாரணத்தையும் கூறினார்கள்: ஒரு போரின்போது ஒரு நபர் இருந்தார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் அன்னாருடன் போர் செய்து கொண்டிருந்தார். தனிப்பட்ட தியாகங்கள் எல்லாம் செய்தார். எப்படிப்பட்ட தியாகங்கள் செய்தார் என்றால் மக்களை வாஹ் வாஹ் என்று கூறியவாறு சண்டையிட்டுக் கொண்டிருந்தார். இதனால் மக்கள் அவரை பாராட்டினார்கள். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரைப் பார்த்து, இவர் நரகவாசி என்று கூறினார்கள். அவர் தன் தரப்பிலிருந்து சண்டையிட்டார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்களே என்று மக்கள் வியப்புடன் பார்த்தார்கள். இவர் இவ்வளவு வீரமாக போர் புரிகிறாரே இவர் எப்படி நரகவாசியாக முடியும் என்று நினைத்தனர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு சொற்களையும் சஹாபிகள் அறிந்திருந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் கூற்று தவறாக முடியாது. கண்டிப்பாக இதில் ஏதோ இரகசியம் இருக்கிறது; அது நமக்கு புரியவில்லை என்று நினைத்தார்கள். எனவே இந்த நபர் என்ன செய்கின்றார் என்று அந்த நபரை பின்தொடர ஆரம்பித்து விட்டார்கள். பின்தொடரும்போது தெரிய வருவது என்ன –வென்றால், அந்த நபர் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது மிக அதிகமாக காயம் அடைந்திருந்தார். எவ்வளவு காயமடைந்திருந்தார் என்றால், அவருக்கு அதிக துன்பம் ஏற்பட்டது. அந்த துன்பத்தை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் அவர் தனது ஈட்டியை எடுத்து தன்னையே குத்தி தற்கொலை செய்து கொண்டார். அவர் மரணித்துக் கொண்டிருக்கும்போது மக்கள் அவரிடம் கேட்டார்கள். அப்போது அவர், இஸ்லாத்திற்காக நான் ஒன்றும் சண்டையிடவில்லை. மாறாக இந்த மக்களோடு எனக்கு பழைய பகைமை இருந்தது. இதனால்தான் சண்டையிட்டுக் கொண்டிருந்தேன் என்று கூறினார். ஆக, இஸ்லாத்தைப பொறுத்தவரை தற்கொலை செய்பவர் இறைவன் மீது தப்பெண்ணத்தில் இருக்கிறார். எனவே இறைவனின் அருட்கொடையிலிருந்து அவர் விலகியிருக்கின்றார்.

இவ்வாறு உண்மையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய அந்த கூற்று உண்மையானதாக இருந்தது. மேலும் அந்த நபர் தற்கொலையின் காரணமாக ஷஹீதாக முடியாமல் போய் விட்டது. இஸ்லாத்திற்காக உயிர்த்தியாகம் செய்யும் அந்த அந்தஸ்து அவருக்கு கிடைக்கவில்லை. இதுதான் ஒரு பாடமாக இருக்கின்றது. அவர் நரகவாசியாகி விட்டார். இந்த பாடத்தை ஒவ்வொரு பொறுப்பாளரும் ஒவ்வொரு பிரதிநிதியும் மனதில் கொள்ள வேண்டும். என்னுடைய ஆலோசனை என்னுடைய கருத்து அல்லாஹ்வுக்காக இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டும். இது இருக்கும்போதுதான் என்னால் சரியான முறையில் அல்லாஹ்வின் அருளைப் பெறக்கூடியவனாக இருக்க முடியும் என்று ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். அப்பொழுதுதான் என்னுடைய வேலையில் பரக்கத் கிடைக்கும் என்று நினைக்க வேண்டும். மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்காக, தனது தான் என்ற அகந்தைக்கு நிம்மதியளிக்க வேண்டும் என்பதற்காக வேலை இருந்தால் பிறகு அவருக்கு நற்கூலி கிடைக்காது. எப்போது நற்கூலி வெகுமதி கிடைக்கும் என்றால் ஒவ்வொரு வேலையிலும் தனது நஃப்ஸை அழித்து விட்டு இறைவனுக்காக மட்டும் செய்யும்போதுதான் அந்த நற்கூலி கிடைக்கும். எனவே உங்களுடைய மனயிச்சையை

நடுவிலிருந்து அழிப்பதற்கு முயற்சி செய்யுங்கள். பல மக்கள் இப்பொழுது பொறுப்பாளர்களாக இருக்கின்றார்கள். இன்னும் சிலர் ஜமாஅத் பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். சிலர் மர்கஸ் அளவில் சிலர் அந்தந்த இடங்களில் பொறுப்பாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பழைய பொறுப்பாளர்களில் பலர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்–பட்டிருக்கிறார்கள். சிலர் புதிதாக வந்திருக்கின்றார்கள். ஆனால் மீண்டும் வந்தவர் யோசித்துப் பார்க்க வேண்டும். கடந்த மூன்று ஆண்டுகள் கழிந்திருக்கின்றன. நீங்கள் அல்லாஹ்வுக்காக அவனது விருப்பத்தைப் பெறுவதற்காக எவ்வளவு வேலை செய்தீர்கள். மேலும் உங்களுடைய நான் என்ற அந்த விஷயத்திற்கு ஆறுதல் அளிப்பதற்காக எவ்வளவு வேலை செய்திருக்கின்றீர்கள். உங்களுடைய அகம்பாவத்திற்காக வேலை செய்தீர்கள் என்றால் அதற்கு எந்தபொரு நற்கூலியும் கிடையாது. அதில் எந்தவொரு பரக்கத்தும் உங்களுக்கு கிடைக்காது. எனவே நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த ஆண்டு பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான ஆண்டாக இருக்கின்றது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட இருப்பவர்கள் அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட பிறகு நீங்கள் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக வேலை செய்ய வேண்டும். மக்களுக்கு காட்டுவதற்காக வேலை செய்யக் கூடாது. பாருங்கள்! எங்களிடம் இவ்வளவு திறமைகள் இருக்கிறது என்பதற்காக வேலை செய்யக் கூடாது. நான் எவ்வளவு செய்திருக்கின்றேன். என்னிடம் எவ்வளவு திறமை இருக்கிறது. நான் இவ்வளவு தப்லீக் செய்திருக்கிறேன். நான் இவ்வளவு பேரிடம் சந்தா வசூல் செய்து விட்டேன் என்று காட்டுவதற்காக செய்யக் கூடாது. என்னிடம் இவ்வளவு திறமை இருந்தது. நான் உமூரே ஆமா துறையில் இவ்வளவு பிரச்சனைகளை தீர்த்து வைத்து விட்டேன். என்னிடம் இவ்வளவு திறமை இருந்தது. நான் தர்பிய்யத் துறையில் எவ்வளவு செய்து விட்டேன் என்றால் மக்கள் சீர்திருந்தி விட்டார்கள் என்று கூறினீர்கள் என்றால் என்னால் சீர்திருந்தி விட்டார்கள் என்று நீங்கள் கூறினீர்கள் என்றால் அதற்கு எந்தப் பலனும் கிடையாது. என்னவெல்லாம் செய்தேனோ அதை அல்லாஹ்வின் அருளினால் செய்திருக்கின்றேன். அவனது விருப்பத்தைப் பெறுவதற்காக செய்திருக்கின்றேன். அவனது அருள் இல்லாமல் என்னால் ஒன்றுமே செய்திருக்க முடியாது என்று நினைக்கும் பொழுதுதான் உண்மையில் உள்ளத்தின் ஆழத்திலிருந்து இந்தக் குரல் வெளிவரும் பொழுதுதான் இந்த தியாகம், இந்த வேலையில் அல்லாஹ் நமக்கு பரக்கத்தை ஏற்படுத்துவான். பிறகு இந்த பரக்கத்தால் இனிய கனிகள் ஏற்படும். அது ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்குப் பலன் அளிப்பதாக இருக்கும். அல்லாஹ்வின் பார்வையில் உங்களது அந்தஸ்தை உயர்த்துவதற்கு போதுமானதாக இருக்கும். பலன் உள்ளதாக இருக்கும். நீங்கள், நான் என்று நினைத்தால் பலனுக்குப் பதிலாக நஷ்டம் கிடைத்து விடும்.



எனவே ஒவ்வொரு துறையினரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று அன்னாரது வருகையின் நோக்கம்தான் நம்முடைய நோக்கமாக இருக்கின்றது. அதாவது மக்களை அல்லாஹ்வின் அருகில் கொண்டு செல்ல வேண்டும். அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நிலைநாட்ட வேண்டும். மனிதனுடைய உள்ளத்தில் நான் என்ற அந்த சிலை இருக்கின்றது என்றால் பிறகு அல்லாஹ் உடைய ஏகத்துவத்தை நாம் எவ்வாறு நிலைநாட்ட முடியும்? ஒரு கோயிலில் இருக்கக்கூடிய சிலையை வணங்குபவரால் எவ்வாறு ஏகத்துவத்தை நிலைநாட்ட முடியுமா? நம்முடைய உள்ளத்திலும் கூட தான் என்பது இருக்கின்றது என்றால் நம்மாலும் ஒன்றும் செய்ய முடியாது. நம்முடைய உள்ளத்தில் ஒரு கோயிலைக் கட்டி அதில் நான் என்ற சிலையை வைத்திருப்பதால் அது சாத்தியமாக முடியாது. அதனை அழித்து ஒழிக்க வேண்டும். அல்லாஹ்வின் மீதான அந்த நேசம் அதிகரிக்கும்போதுதான், 'தான்' என்ற அகந்தையை நொறுக்கி விட்டு வேலை செய்யும் போதுதான் எவ்வளவு பரக்கத் ஏற்படுகின்றது என்று பாருங்கள்!

ஜமாஅத் அந்த பரக்கத்துகளுக்கான காட்சிகளைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றது; பார்க்கவும் செய்யும். இந்த மக்கள்தான் கிலாஃபத்தின் ஓர் உறுதியான தோள் ஆக இருக்கின்றார்கள். உறுதியான கரங்களாக இருக்கின்றார்கள். கிலாஃபத்திற்கு உதவியாளர்களாக இருக்கின்றார்கள். உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். நாம் நம்முடைய வாழ்வில் எந்தப் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்–பட்டாலும் சரி எந்த வேலை நமக்கு கொடுக்கப்பட்டாலும் சரி அது பொறுப்பாளர் என்ற வகையிலாக இருந்தாலும் சரி, நாயிப் பொறுப்பாளராக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த வகையில் வந்தாலும் சரி அதை நிறைவேற்றுவதற்கு எல்லா வகையிலும் நாம் ஆயத்தமாக இருப்போம். நம்மிடம் அல்லாஹ் எந்தப் பொறுப்பை ஒப்படைத்திருந்தாலும் சரி ஜமாஅத் தரப்பிலிருந்து காலத்தின் கலீஃபா அவர்களின் தரப்பிலிருந்து என்ன வேலை நமக்கு கொடுக்கப்பட்டாலும் சரி நாம் என்ன புரிய வேண்டும் என்றால் இது அல்லாஹ்வின் வேலையாகும். அல்லாஹ்வுக்காக நாம் இதை செய்ய வேண்டும். இந்த சிந்தனையை நாம் கொண்டிருப்போம் என்றால் பிறகு நமக்கு வெற்றி கிடைக்கும். இவ்வாறு உறுதி

எடுத்துக் கொள்ளுங்கள். நான் எவ்வாறு அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்கு எல்லா தியாகங்களையும் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று பார்க்க வேண்டும். என்னுடைய அகந்தையை நிலைநாட்டுவதற்காக இருக்கக் கூடாது என்று நினைக்க வேண்டும்.



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவுரை கூறியவாறு ஓரிடத்தில் கூறினார்கள்: நான் நண்பர்களுக்கு அறிவுரை கூறுகின்றேன். இந்த விஷயங்களை கண் முன் நிறுத்தியவாறு நீங்கள் துஆ செய்யுங்கள். மிகவும் நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். உங்களை நீங்களே அழிக்காமல் உங்களுடைய நஃப்ஸை அழிக்காமல் உங்களுக்கு வெற்றி கிடைக்க முடியாது. முதலில் அவசியம் என்னவென்றால், உங்களிடம் என்ன எதிர்பார்க்கப்படுகின்றதோ அதை நீங்கள் நிறைவேற்றுங்கள். அல்லது சட்டத்திற்கேற்ப எவ்வளவு செய்ய வேண்டுமோ அந்த வேலையைச் செய்யுங்கள். அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக நாம் அந்த வேலையை செய்ய வேண்டும். இவ்வாறு வேலை நடக்கும்போது அசாதாரணமான பரக்கத் ஏற்படும்.

அதே போன்று பொறுப்பாளர்களும் இங்கிருந்து ஆலோசனை வழங்குபவர்களும் இந்த விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். ஆணவம், அகம்பாவம், சுயநலம் இவை மிகப் பெரிய தீமைகளாகும். நாம் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் அருள்கள் மற்றும் அருட்கொடைகள் அவர்கள் மீது இருக்கின்றன. அவற்றைப் பார்த்து நாம் அகம்பாவம் கொள்ளக் கூடாது. செகரட்டரி மாலின் உள்ளத்தில் என்னுடைய அறிவின் காரணமாக நான் இந்த பட்ஜெட்டை நிறைவேற்றி விட்டேன் என்று நினைத்தால், ஏற்கனவே நான் கூறியது போன்று தர்பிய்யத் செயலரின் உள்ளத்தில் என்னுடைய திறமையினால் துறையின் வேலை நடந்து விட்டது என்று நினைத்தால் எந்தப் பொறுப்பாளர்களுக்கு அப்படிப்பட்ட ஒரு சிந்தனை வந்தாலும் சரி ஏதாவது திறமையின் காரணமாக இந்த வேலை நடந்து விட்டது என்றால் அவரிடம் அகம்பாவம் உருவாகி விடும். அகம்பாவம் உருவாகி விடும்போது பிறகு அல்லாஹ்வின் அருள் கிடைக்காது. ஏற்கனவே இது பற்றி கூறப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அறிவுரை வழங்கியவாறு ஓரிடத்தில் கூறினார்கள்: உண்மையான வெற்றிக்கான யுக்தி என்னவென்றால் அல்லாஹ்வின் முன் விழுந்து விடுங்கள். உங்களது பலவீனங்களை அவனுக்கு முன்னால் ஒப்புக் கொள்ளுங்கள். எவர் மனதில் என்னாலும் ஒரு வேலை செய்ய முடியும் என்று நினைக்கின்றாரோ மக்களுக்கு முன்னால் நான் என்ன எனது ஆற்றல் என்ன என்று காட்டும்போது அவர் நயவஞ்சகரும் பொய்யரும் ஆவார். சில மக்கள் எப்படி இருக்கின்றார்கள் என்றால் என்னுடைய அந்தஸ்து என்ன என்று கூறுகின்றார். அல்லாஹ்வின் அருளால் தான் இந்த வேலை நடந்தது என்று கூறுகின்றார். ஆனால் உள்ளத்தில் அல்லாஹ்வின் முன் குனிய வேண்டும் என்ற அந்த நிலை இல்லை. உண்மையான தன்னடக்கம் உடையவர் யார் என்றால் உள்ளத்திலும் அதை ஒப்புக் கொள்ள வேண்டும். நாவினால் மட்டும் கூறி விட்டு மனதில் என்னால் இதை செய்ய முடியும் என்று நினைத்தால் அது சரியல்ல. நாம் மனதில் நடுநிலையுடன் சிந்தித்தால் நம்மிடத்தில் ஏதேனும் திறமைகள் இருக்கின்றனவா இல்லையா என்று பார்க்கும்போது என்னிடம் எந்த திறமையும் இல்லை என்பதை ஒருவர் புரிந்து கொள்வார். அதனால்தான் பரக்கத்துகள் கிடைக்க முடியும். அவற்றின் மூலமாகவே வெற்றி கிடைக்க முடியும். அப்பொழுதுதான் அல்லாஹ்வின் அருள் மனிதனுக்கு கிடைக்க முடியும். இது இருக்கும் பொழுதுதான் நீங்கள் உங்களுக்காக இருக்கக்கூடிய அந்த ஷூராவின் தீர்மானத்தின்படி உங்களால் நடக்க முடியும். அல்லாஹ்வுக்காக நீங்கள் அதை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய முடியும். அல்லாஹ்வுக்காக நீங்கள் முயற்சி செய்யும்போது பிறகு அதில் பரக்கத் ஏற்படும். அது அல்லாமல் நீங்கள் தீர்மானம் எடுத்து விடுகின்றீர்கள். மிகவும் உத்வேகத்துடன் சொற்பொழிவாற்றி விடுகின்றீர்கள். பொதுவாக ஷூராவில் இதுதான் நடக்கின்றது. மிகவும் பேச்சாற்றலோடு ஒருவர் பேச ஆரம்பித்து விடுகின்றார். தன்னுடைய ஆலோசனையை எடுத்து வைத்து விடுகின்றார். ஆனால் ஷூராவிற்குப் பிறகு அதை மறந்து விடுகின்றார். அவர்கள் என்ன வேலை செய்ய வேண்டும் என்பதையே மறந்து விடுகின்றனர்.

ஆக, அசல் பரக்கத் எதில் இருக்கின்றது என்றால் அல்லாஹ்வுக்கு முன்னால் குனிந்தவாறு நம்முடைய தான் என்ற அந்த அகந்தையை விட்டு விட வேண்டும். நம்முடைய பொறுப்பை புரிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வுக்கு முன்னால் துஆ செய்ய வேண்டும். இந்த தீர்மானங்களின்படி செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நீங்கள் ஆய்வு செய்தீர்கள் என்றால் கடந்த மூன்று ஆண்டுகளின் மஜ்லிஸே ஷூராவின் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தால் என்ன தீர்மானங்கள்

எடுக்கப்பட்டுள்ளது என்று பார்த்தால் உங்களுக்கே தெரிந்து விடும். இந்த மூன்று ஆண்டுகளில் நீங்கள் என்னவெல்லாம் பெற வேண்டி இருந்ததோ அதை உங்களால் பெற முடியாமல் போய் விட்டது. பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நீங்கள் ஆய்வு செய்தால் இன்னும் பல வேலைகளை நீங்கள் மறந்து போய் விட்டீர்கள் என்பது உங்களுக்கு தெரிந்து விடும். நீங்கள் இதை செய்வேன் என்று உறுதி எடுத்துள்ளீர்கள். பிறகு நீங்கள் மறந்தே போய் விட்டீர்கள். அதை உங்களால் செய்யவே முடியவில்லை. அந்த பழைய விஷயங்களை நீங்கள் நினைவில் வையுங்கள். பழைய தீர்மானங்களை நீங்கள் மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள். நீங்கள் புதிதாக எடுத்து வைக்கின்ற அந்த தீர்மானங்களையும் முன்னால் வைத்து உறுதி எடுத்துக் கொள்ளுங்கள். நாம் இப்போது இதை நமக்கு முன்னால் வைத்தவாறு இதன்படி அமல் செய்ய வேண்டும். மேலும் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக நாம் அமல் செய்ய வேண்டும். யாருக்கும் காட்டுவதற்காக அல்ல என்று நினைக்க வேண்டும். உண்மையான நம்பிக்கையாளராக ஆக வேண்டும். அவருடைய மகத்துவம் என்னவென்றால் அவர் செய்யக் கூடியதை அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக செய்கின்றார். எனவே சில மக்கள் எங்களிடம் வேலை செய்வதற்கான வழிவகைகள் இல்லை என்று கூறி விடுகின்றனர். தேவையான பொருள்கள் எங்களிடம் இல்லை என்று கூறுகின்றனர். அதனால் எங்களால் அந்த வேலையைச் செய்ய முடியவில்லை என்று கூறுகின்றார்கள். அவர்களுடைய எண்ணங்கள் உயர்ந்திருக்க வேண்டும். துணிவு தொய்வடைந்து விடக்கூடாது. உறுதியான எண்ணம் இருக்க வேண்டும். வேலை செய்ய வேண்டும் என்ற துடிப்பு, பேரார்வம் இருக்க வேண்டும். அல்லாஹ்விடம் துஆவுடன் உதவி ஆதரவு கேட்டால் பிறகு கடினமாக உழைத்துப் பணி புரிந்தால் பிறகு ஒவ்வொரு பொறுப்பாளரும் எப்படிப்பட்ட வேலை செய்ய முடியும் என்றால் அதனால் அவரிடம் பணிவு தன்னடக்கம் ஏற்பட முடியும். கிலாஃபத்திற்கு உண்மையான உதவியாளராக முடியும். எனவே இந்த விஷயங்களை மனதில் கொள்ளுங்கள். வெறும் நாவளவில் வாதம் புரிந்து சுல்தானே நஸீராக அதாவது கிலாஃபத்திற்கு உதவி புரிபவராக ஆக முடியாது. அல்லாஹ்வுடன் நீங்கள் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். மேலும் உங்களுடைய அந்த அகந்தையை அழித்து அல்லாஹ்வின் விருப்பத்திற்காக மட்டும் நீங்கள் வேலை செய்ய வேண்டும். இதற்காக முழுமையான ஈடுபாட்டுடன் நீங்கள் வேலை செய்ய வேண்டும். உங்களுடன் இருப்பவர்களையும் நீங்கள் உடன் அழைத்துச் செல்ல வேண்டும். அப்போதுதான் ஒரு குழு இந்த வேலையில் மூழ்கியிருக்க முடியும். பிறகு அதற்கு நல்ல விளைவுகள் ஏற்பட முடியும். எப்பொழுது இது நடக்குமோ அப்பொழுதுதான் நீங்கள் அந்த மஜ்லிஸே ஷூராவின் ஆலோசனையின்படி நீங்கள் செயல்படுபவர்களாக ஆக முடியும். எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். மஜ்லிஸே ஷூராவின் போது நீங்கள் அதன் கண்ணியத்தை மனதில் வைக்க வேண்டும். நீங்கள் வெறும் விவாதம் மற்றும் தர்க்கம் செய்யாதீர்கள். அதற்கு தேவை இருக்கிறதா என்று பாருங்கள். தேவை இருக்கிறது என்றால் உங்களது ஆலோசனையை வழங்குங்கள். கொஞ்ச கொஞ்ச வித்தியாசத்தில் உங்களது கருத்து முன்னரே கூறப்பட்டு விட்டால் அதை மீண்டும் கூற வேண்டிய தேவையில்லை. மீண்டும் அதே விஷயம் வந்து விடுகின்றது. நீங்கள் உங்களுடைய தான் என்ற அகந்தையை உங்களிடமிருந்து அழித்து விட வேண்டும். நான் எண்ணியதை அவர் கூறி விட்டார் என்று நீங்கள் அமைதியாக இருந்து விட வேண்டும்.

ஆக, ஷூராவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அல்லாஹ்வுக்கு அஞ்சி அதற்கேற்ப அவர் தீர்மானங்கள் எடுக்க வேண்டும். ஆலோசனை வழங்க வேண்டும். அப்பொழுதுதான் உங்களால் அந்த அந்தஸ்தை அடைய முடியும். அது இந்த சபைக்கான ஒரு கண்ணியமாக இருக்கின்றது. இல்லை என்றால் நீங்கள் ஷூராவில் அமர்ந்து உலக விஷயங்களின் பிரதிநிதியாக உங்கள் வேலைகளை செய்து கொண்டிருப்பீர்கள். ஓர் ஆன்மிக ஜமாஅத்தின் பிரதிநிதியாக உங்களால் வேலை செய்ய முடியாது.

எனவேதான் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் மஜ்லிஸே ஷூராவில் கலந்து கொள்ள வந்திருக்கும் அந்த நபர்களுக்கு கூறுகின்றேன். உங்களிடம் இறையச்சத்தை உருவாக்குங்கள். உங்களது பேச்சாற்றல் இங்கும் பலன் அளிக்காது. மறுமையிலும் பலன் அளிக்காது. இங்கும் மறுமையிலும் பலன் அளிக்கக்கூடியது ரப்புனல்லாஹ் – நம்முடைய ரப் அல்லாஹ் என்று கூறுவது மட்டும்தான் ஈருலகிலும் பலன் அளிக்கும். இந்த விஷயம் நம்மிடம் இல்லையென்றால் ரப்பனா இன்னனா ஸமிஃனா முனாதியய் யுனாதீ லில் ஈமானி அன் ஆமினூ பிரப்பிகும் ஃப ஆமன்னா என்ற விஷயம் நம்மிடம் இல்லையென்றால் பிறகு நீங்கள் ஆழ்ந்து கவனம் செலுத்துங்கள். உலகத்தின் மற்ற ஆற்றல்கள் மற்ற சக்திகள் மற்றும் சமுதாயங்களுக்கு எதிராக நமக்கு என்ன அந்தஸ்து இருக்கின்றது? உலகத்திற்கு எதிராக ஒரு பறவையின் இறக்கையைப் போன்ற அந்தஸ்து கூட நமக்கு கிடையாது. நான்



ஓதிய இந்த வசனத்தின் பொருள் என்னவென்றால், எங்கள் இறைவா! நிச்சயமாக எப்படிப்பட்ட அழைக்கக்கூடிய ஒர் அழைப்பவரின் அழைப்பைக் கேட்டோம் என்றால் அவர் ஈமானுக்காக அழைப்பு விடுத்தார். உங்களது ரப்பின் மீது ஈமான் கொள்ளுங்கள் என்று கூறினார். எனவே நாங்கள் செவியேற்றோம்; நாங்கள் ஈமான் கொண்டோம். நீங்கள் ஆழ்ந்து கவனம் செலுத்துங்கள். நாம் உலகத்தின் பக்கம் கவனம் செலுத்துகின்றோமா? நம்முடைய அந்தஸ்து என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் நாம் இந்த விஷயத்தை அதாவது நமது ஈமானை நமது வேலைகளை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தும்போதுதான் நாம் வெற்றி பெற முடியும். நாம் இதில்தான் பெருமை கொள்ள முடியும். நாங்கள் அல்லாஹ் கூறியதை ஏற்றுக் கொண்டோம். மேலும் பறைசாற்றியவரின் அந்தக் குரலை நாங்கள் கேட்டோம். அதில் ஈமான் கொண்டோம். அந்தப் பணியை முன்னால் கொண்டு செல்வதற்காக எங்களை அர்ப்பணித்துள்ளோம். இந்த விஷயம் இருக்கிறது என்று சொன்னால் பிறகு நாம் இதில் பெருமைப்படலாம். இதுதான் நமது உள்ளத்தில் மேலோங்க வேண்டும். நமது சிந்தனையில் அல்லாஹ்வின் மீதான அச்சம் இருக்க வேண்டும். நமது நாவில் அல்லாஹ்வின் ஆதிக்கம் இருக்க வேண்டும். நமது உள்ளத்தில் அல்லாஹ்வின் அச்சம் ஆட்சி செய்ய வேண்டும். நமது ஆலோசனையில் அல்லாஹ்வின் ஆதிக்கம் மேலோங்க வேண்டும். நமது இந்தக் கருத்துகளில் அல்லாஹ்வின் அச்சம் ஆதிக்கம் செலுத்த வேண்டும். இந்த விஷயம்தான் நமக்கு உலகில் முன்னேற்றத்தைத் தரும். இதில்தான் நாம் கண்ணியத்துடன் பார்க்கப்படுவோம். இது இருக்கும்பொழுது நாம் வெற்றி பெறுவோம்.

எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எந்தப் பொறுப்பாளர்கள், பிரதிநிதிகள் இங்கு அமர்ந்திருக்கிறார்களோ அவர்கள் இதை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். நீங்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். மேலும் இந்த ஆன்மாவை உருவாக்கு –வதற்காக ஜமாஅத் பிரதிநிதிகள் அனுப்பியிருக்கிறார்கள். பொறுப்பாளர்களும் மற்றும் ஷூராவின் உறுப்பினர்களும் நினைவில் கொள்ள வேண்டும். இறைவன் மீதான அச்சத்தை உருவாக்குங்கள். இது உருவாகி விடும் பொழுதுதான் இன்ஷா அல்லாஹ் மிகப்பெரும் மறுமலர்ச்சி ஏற்படும். புரட்சி ஏற்படும். அல்லாஹ் அதை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் ஏற்படுத்துவான் என்பதை உலகம் பார்க்கும். இந்த விஷயம் உங்களுக்குப் புரிந்து விட்டால் இதை நீங்கள் நன்றாகப் புரிந்து கொண்டால் ஷூராவில் இதை மனதில் வைத்தால் பிறகு நீங்கள் ஒரு வெற்றிகரமான ஷூராவை நிறைவேற்றி விட்டீர்கள். அந்த நோக்கத்தைப் புரியக் கூடியவர்களாக இருப்பீர்களாக.

### ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இறையடியார்களுடன் அன்பு செலுத்துங்கள். மேலும் அவர்கள் மீது கருணை காட்டுங்கள். மேலும் நாவாலோ கைகளாலோ வேறு எவ்வகையாலோ அவர்கள் மீது அநியாயம் செய்யாதீர்கள். அவனது படைப்பினங்களின் நலனுக்காக முயற்சி செய்து கொண்டே இருங்கள். உங்களின் கீழ் இருக்கக் கூடியவராக இருந்தாலும் அவர் மீது கர்வம் காட்டாதீர்கள். ஒருவர் உங்களை ஏசினாலும் நீங்கள் எவரையும் ஏசாதீர்கள். இறைவனால் ஏற்றுக் கொள்ளப்படும் பொருட்டு நீங்கள் எளிமை, சகிப்புத்தன்மை, நல்லெண்ணம் ஆகியவற்றை கைக்கொண்டு படைப்பினங்களுடன் அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். பெரியோர்களாக இருந்து சிறியவர்கள் மீது கருணை காட்டுங்கள். அவர்களை அற்பமாகக் கருதாதீர்கள். நீங்கள் அறிவாளியாக இருந்து அறிவீனர்களுக்கு அறிவுரை கூறுங்கள். தற்பெருமையால் அவர்களை அவமானப்படுத்தாதீர்கள். நீங்கள் செல்வந்தர்களாக இருந்து ஏழை எளியவர்களுக்கு உதவி புரியுங்கள். தன்னலத்தால் அவர்கள் மீது அகங்காரம் கொள்ளாதீர்கள். எனவே நான் உங்களுக்கு இறைவனின் படைப்பினங்களோடு அன்பு செலுத்துமாறும் அவர்களுக்கு தொண்டு செய்யுமாறும் அறிவுரை கூறுகிறேன்.

(நூஹ் நபியின் கப்பல், பக்கம் 24,25)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam